பதிவு எண் M. 4900

16-பக்கங்கள்.

குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி ரு-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 7-5-1949 சனிக்கிழமை } மலர் 35.

கடவுள் சங்கதி.

★

"கடவுள் சங்கதி" என்று இவ் வியாசத்துக்குத் தலைப்புக் கொடுத்ததின் காரணம் என்னவென்றால், கடவுள் உண்டா இல்லையா என்பதல்ல இவ்வியாசத்தின் கருத்து என்பதை விளக்கவே யாகும். கடவுள் என்பதாக ஒன்று இருக்கட்டும்; அல்லதுகடவுள்என்பதாக ஒன்று இல்லாமலே போகட்டும். இருந்தால் உயர் குணங்களும் நற் பண்புகளுமேகடவுளாக இருக்கட்டும்; அல்லது கடவுள் என்பதாக ஒரு வஸ்து அய்ம்புலன்களோடு இருந்து கொண்டு நினைத்துக்கொண்டும், செய்துகொண்டும், கவனமாய் கவனித்துக்கொண்டும், பலாபலன்களை அளித்துக்கொண்டும் இருக்கட்டும், அல்லது குணமில்லாமல், உருவமில்லாமல்,விளக்கிச்சொல்ல வகையும் ஆதாரமும் இல்லாமல் ஒரு அரூபி வஸ்துவாக இருந்தாலும் இருக்கட்டும். அது மனத்துக்கும் அறிவுக்கும் எட்டினதாகவோ அல்லது அறிவுக்கும் மனத்துக்கும் எட்டாததாகவோ இருக்கட்டும். புத்த பகவானுக்கு அறிவு வழிகாட்டிய கடவுளாக இருந்தாலும்இருக்கட்டும் அல்லது கிறிஸ்துநாதருக்கு அருள் சுரந்த கடவுளாக இருந்தாலும் இருக்கட்டும் அல்லது மகம்மது நபியை உலகுக்கு அனுப்பி மக்களுக்குத் தனது நீதியை எடுத்துச் சொல்லும்படி செய்த கடவுளாக இருந்தாலும் இருக்கட்டும். மற்றும் ஆகாயமாய், நீராய், நெருப்பாய், காற்றாய், நிலப்பொருளாய் இருந்தாலும் இருக்கட்டும். அல்லது எப்படியோ ஏதோ ஒருவிதமாய்,கருத்தாய், கற்பனையாய் இருந்தாலும் இருக்கட்டும். அதைப்பற்றியெல்லாம்கூட உண்டு, இல்லை என்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல.

மற்றபடி கடவுள் விஷயமாய் இக்கட்டுரையின் நோக்கம் என்னவென்றால்,

கடவுள் என்பதைப்பற்றி, கடவுள் என்பதற்கு ஆக, மனிதர்கள் இன்று நடந்து கொள்ளும் தன்மை, பான்மை சரியா? அவை அவசியமா? என்பதேயாகும்.

முதலாவது இக்கட்டுரையின் நோக்கம்:—

கடவுளைக் காப்பாற்ற கடவுள் ஒருவரோ பலரோ உருவமாகவோ அருவமாகவோ, மற்றெப்படியாகவோ கடவுள் இருக்கிறார் என்பதாக மக்களுக்கு மக்கள் எடுத்துச் சொல்லவேண்டியதும் பிரச்சாரம் செய்யவேண்டியதும் அவசியம்தானா?

இரண்டாவதாக, கடவுள் எண்ணம் மக்களுக்கு மறைந்து போய் விட்டது. அதை ஞாபகப்படுத்தப் பிரச்சாரகர்களைச் சம்பளத்துக்கு வைத்துப் பாதிரிகளை, குருமார்களை ஏற்படுத்திக் கடவுள் தத்துவத்தைப் போதிக்க ஸ்தாபனங்கள் ஏற்படுத்தவேண்டியது அவசியம் தானா?

மற்றும் நாஸ்தீகர்கள் பலர் தோன்றி, கடவுள் இல்லை என்று நாஸ்தீகப்பிரச்சாரம் செய்துவருவதால் கடவுள் கரைந்து வருகிறார். ஆதலால் கடவுளைக் காப்பாற்ற வேண்டியது மிகமிக அவசியம் என்று பலர் கருதி, ஆஸ்தீகப் பிரச்சாரம் செய்து கடவுளைக் காப்பாற்ற வேண்டியது அவசியம் தானா?

மற்றும் கடவுளுக்குக் கோவில் வேண்டுமா?

கடவுளுக்குப் பெண்டாட்டி வேண்டுமா?

கடவுளுக்குக் காமவிகாரம் உண்டா?

கடவுளுக்குக் குழந்தைகள் வேண்டுமா?

கடவுளுக்குத் தாசி, போக மாதர் வேண்டுமா?

கடவுளுக்குப் படைப்பு, சாப்பாடு, நகை, துணி, மணி, கல்யாணம், உற்சவம், ஊர்வலம் வேண்டுமா?

இவை ஒருபுறமிருக்க, கடவுள் சக்திக்கு—செய்கைக்கு ஏதாவது அளவுண்டா அல்லது அவர் எல்லாம்வல்லவரும் எல்லாவற்றிற்கும் பொறுப்பானவருமா?

அவருடைய சக்திக்கும் செயலுக்கும் எல்லை உண்டா? இல்லையா?

கடவுள் சக்தியை உணர்ந்தவன் கடவுளைக் காப்பாற்றக் கவலை கொள்ளுவானா?

உண்மையிலேயே சர்வ சக்தி

புள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார். "அவனன்றி ஒரு அணுவும் அசையாது" என்று மனப்பூர்வமாய் நம்பி இருக்கும் ஒருவன் கடவுளைக் காப்பாற்ற முற்படுவானா? கடவுள் இல்லை என்று ஒருவன் சொன்னால் அவன் மீது பாய்ந்து கோபிப்பானா?

இந்தப்படி கடவுளைப் பற்றிக் கவலைப்படுகிறவர், கடவுள் பிரச்சாரம் செய்கிறவர்களில் யாராவது தங்களது எண்ணத்தில்-நடத்தையில் கடவுள் சித்தப்படி நடப்பவர்களாகவோ, கடவுளுக்குப் பயந்து நடப்பவர்களாகவோ அல்லது கடவுள் தன்மையில் மதிப்பும், நம்பிக்கையும், பயமும் கொண்டவர்களாகவோ எங்காவது காணப்படுகிறார்களா?

கடவுள் நம்பிக்கை உடையவன் எவனாக இருந்தாலும், அவன் கடவுளைத் தொழவேண்டுமா? பூசிக்க வேண்டுமா?

தொழுதாலும், பூசித்தாலும், அதற்கு ஒரு நேரம், ஒரு இடம், ஒரு உருவம், ஒரு வாக்கியம்—பாட்டு வேண்டுமா?

மற்றும் அதற்குப் பண்டம், படைப்பு வேண்டுமா?

உண்மையாகக் கடவுள் இருப்பதானாலும், இருப்பதாக நம்புவதானாலும் பலமதக்காரர்களும் இன்று கடவுள் சம்பந்தமாய் நடந்து கொள்ளும் நடத்தைகள் அவசியமா? என்பனவாகியவைகள் ஒருபுறமிருக்க,

தங்களைப் பெருத்த அறிவாளிகள் என்றும், எல்லாம் அறிந்த மேதாவிகள் என்றும் கருதிக் கொண்டிருக்கும்சிலர் கூறுகிறபடி, அதாவது "கடவுள் இருக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம், கடவுள் என்பதாக ஒரு சர்வ சக்தியுள்ளவர் ஒருவர் இருக்கிறார் என்று மக்கள் நம்பும்படி செய்தால்தான் மக்கள் யோக்கியமாய்—பிறருக்குத் தீங்கிழைக்காமல் நடந்து கொள்ளுவார்கள் ஆதலால் கடவுள் பயம் மக்களுக்கு இருக்க வேண்டும், அந்தப் பயத்தைத் தெளியவைக்கக் கூடாது" என்று சொல்லுகிறார்களே அதைப்பற்றிச் சிறிது சிந்தித்தால், அவர்கள் கருதுவதுபோல், கடவுள் உணர்ச்சியையும், கடவுள் தன்மைகளையும், நியாயத் தீர்ப்புகளையும், பயப்படத்தக்க கொடூர ரூபம் உள்ள நரகவேதனைகள், செக்கில் போட்டு ஆட்டுதல் முதலிய பலமான தண்டனைகளையும், பின் ஜன்மத்தில் பல கஷ்டமான இழிவுகளையும், துன்பங்களையும் நரத்தக்க தலைவிதிகளையும், மற்றும் பலவித மோட்ச சுகங்களையும், உயர் பிறவிகளையும், சுக போகங்களையும் தரத்தக்க முன் ஜென்ம புண்ணியகர்மங்களையும், அவைகளுக்கேற்ற கடவுள்வாக்கு, வேதம், சாஸ்திரம், புராணம் முதலிய கற்பனைகளையும், எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாய் கற்பனை செய்து மக்களுக்குள் பல ஆயிரம் ஆண்டுகளாகப் புகுத்தி வந்தும்கூட, இன்றுவரையில் மக்களில் பெரும்பாலோர்—ஏறக்குறைய எல்லா மக்களும் யோக்கியமாய் மனிதனை மனிதன் ஆட்கொள்ளாமல், சராசரி மனிதனுக்கு மேம்பட்ட பொருளை அனுபவியாமல் இருக்க முடியவில்லையே அது ஏன் என்றும், கடவுள் உணர்ச்சியை இவ்விதமாக எல்லாம் மக்களுக்குள் ஊட்டியதால் ஏதாவது பயன் ஏற்பட்டிருக்கிறதா என்றும்பார்த்தால், மனிதன் ஒழுக்கத்திற்குக் கடவுள் உணர்ச்சி வேண்டும் என்கிற விதமும் அடிபட்டுப் போகிறதே.

என்னெனில், உலகில் அறிவில்லாத பாமர ஏழை மக்கள் மாத்திரம் தான், ஒழுக்கமற்று நாணயமற்று உண்மையற்று நடந்து கொள்ளுகிறார்கள் என்பது அல்லாமல், கற்ற மக்கள், செல்வவான்கள், பெரும் பதவியில் உள்ளவர்கள், மிக மிகப் பக்திமான்கள், குருமார்கள் உட்பட எல்லோருமே பெரிதும் விதிவிலக்கு இல்லாமல், கீழ் மக்கள் தன்மையாய் நடந்து கொள்ளுகிறதைப் பார்க்கிறோமே. ஆகவே கடவுள் உணர்ச்சிக்கும், ஒழுக்கத்துக்கும் உயர்குணத்துக்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்று தெளிவாகிவிடவில்லையா? கடவுளுக்கு உருவம் எதற்கு என்றால் அதற்கு ஒரு சமாதானம் கூறப்படுகிறது. அதென்னவென்றால்,

"பாமர முட்டாள் ஜனங்களுக்கு கடவுளின் அருவ—(உருவமற்ற)த் தன்மை விளங்காது ஆதலால், கடவுளை ஒரு உருவமாகக்காட்டி அந்த உருவம் மக்கள் உள்ளத்தில் பயரூபமாய் அடிமை ரூபமாய் விளங்க, கடவுள் உருவங்களுக்குப் பல கோர கொடூரச் செயல்களைக் கற்பித்து, அதோடுகடவுளை மேல் ஜாதியாகக்கற்பித்து, அவைகளிடத்தில் பக்திஉண்டாகும்படி செய்வதற்கு ஆக உருவம் கடவுளுக்கு அறிவாளிகளால் கற்பிக்கப்பட்டதாகும்" என்று சொல்லப்படுகிறது. இதையும்சிறிது சிந்தித்தால் இதன் பயனற்ற தன்மையும், அறியாமையும், சூழ்ச்சியும் விளங்காமல் போகாது.

சாதாரணமாக, நம் நாட்டில் கடவுளுக்கு உருவங்கள் ஏற்படுத்தி வழிபாடு செய்யத்துவங்கிய காலம் 2000, 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவே இருக்கலாம். அதாவது ஆரியர் நம் நாட்டிற்கு வந்து, அவர்களது (ஆரிய) மதத்தைப் புகுத்தி, அதன் மூலம் கடவுள்களைக் கற்பித்து, அவற்றிற்கு உருவங்கள் ஏற்படுத்தின காலத்தில் இருந்தே, நம்நாட்டில்உருவக் கடவுள்கள் காட்சி அளித்து வருகின்றதென்னலாம். அதற்கு ஆதாரம் என்னவெனின், எந்தக் கடவுள்களது உருவத்தை எடுத்துக் கொண்டாலும், ஆரிய மதக் கதை சம்பந்தமும், ஆரியத் தோற்ற சம்பந்தமும் இல்லாமல் காண்பது அரிதாகவே இருக்கிறது. ஆகவே இந்தப்படி 3000, 4000 ஆண்டுகளாகக் கடவுளை உருவமாக்கி, மக்களுக்குக் காட்டி, கடவுள் தன்மையை ஊட்டி வந்தும், இன்றைக்கும் பாமர மூட ஜனங்கள் மாத்திரம் அல்லாமல் பண்டிதர்கள், ஞானிகள் என்பவர்கள் முதல் பெரும் மேதாவிகள்என்பவர்களுக்குக் கூட, உண்மையான கடவுள் பக்தி அவரவர் நடப்பில் கடவுள் தன்மை, பகுத்தறிவு ஆகியவை ஏற்படவில்லை என்றால், மூடர்களுக்குக் கடவுள் பக்தி ஏற்படுவதற்கு ஆக உருவம் (விக்கிரகம்) கற்பிக்கப்பட்டது என்பதில் ஏதாவது உண்மையோ பலனோ அறிவுடைமையோ உண்டு என்று யாராவது கொள்ள முடியுமா?

மற்றும் நித்தியமான சர்வசக்தியும், சர்வ வியாபகமும் உள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றால், கடவுள் என்பதாக ஒன்று உண்டா இல்லையா என்பதாக மக்களுக்குச் சந்தேகம் ஏற்படுவா

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

20 ஆண்டுகளுக்குமுன் பெரியார்.

மெட்டிரியலிஸம்.

ஆத்மா.

ஆத்மா, என்னும் விஷயத்தைப் பற்றி இங்கு எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர் இதுஒரு தத்துவ விசாரணை; இதைப்பற்றி எழுதவோ, பேசவோ வேண்டிய அவசியம்சமுதாயச் சீர்திருத்தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக்காரர்கள் அனாவசியமாய்க் கண்ட கண்ட விஷயங்களிலெல்லாம் தலையிட்டுச் சீர்திருத்தத்துறையைப்பாழாக்கிக்கொள்ளுவானேன்? என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட நண்பர்கள் சமுதாயச் சீர்திருத்தம் என்பது என்ன? என்பதைச் சரிவர உணராதவர்கள் என்று நினைத்துவிட்டு, நம் நோக்கப்படியே, நாம் மேலே செல்லக்கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில் சமுதாயச் சீர்திருத்தம் என்றால், ஏதோ அங்கும் இங்கும் இடிந்துபோன—சுவண்டுபோன—அடிப்போன பாகங்களுக்குச் சுரண்டி, கூறுகுத்தி, மண்ணைக்குழைத்து, சந்து பொந்துகளை அடைத்துப் பூசிமெழுகுவது என்றுதான் அநேகர் கருதி இருக்கிறார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரை நாம் அம்மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாயச் சீர்திருத்தக்காரரல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். நாம் யார் என்றால், மக்கள் சமுதாயம் (மக்கள் சமுதாயம் என்றால் உலகமக்கள் சமுதாயம்) என்ன காரணத்தினால்—ஏன் சீர்திருத்தப்படவேண்டிய நிலைமைக்கு வந்தது? என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடியும் அந்நிலை ஏற்படாமலிருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில், அடியோடுபேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை, மேற்கொண்டிருக்கின்றபடியால் சமுதாயச் சீர்திருத்தம் என்பதைப் பற்றி, மற்ற மக்கள் அநேகர் நினைத்திருந்ததற்கு, நாம் மாறுபட்ட கொள்கையையும், திட்டத்தையும், செய்கையையும் உடையவராய்க் காணப்படவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயேதான் நாம், உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதைத் தப்பு என்றும், தேவை என்பதை தேவை இல்லை என்றும், கெட்டது என்பதை நல்லதென்றும், நல்லது என்பதைக் கெட்டது என்றும், காப்பாற்றப்பட வேண்டுமென்பதை ஒழிக்கவேண்டும் என்றும், மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயத்தைக்கூறுவோராக—செய்வோராகக் காணப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம் போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும், பழிக்கப்படாமல்—குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். உதாரணமாக இது விஷயமாய் நாயனார் தமது குறளில் "உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்தலகையாய் வைக்கப்படும்" என்று ஒரு குறள் காணப்படுகின்றது. இதன் பொருள் அக்குறளில் காண்கின்றபடி பார்த்தால் "உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை இல்லை என்று சொல்லுபவன் உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதில்இருந்து, உலகத்தார் என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? "உலகத்தார் என்றால் உயர்ந்தோர்" என்று சொல்லுவதானால், உயர்ந்தோர் என்பதற்கு லட்சணமென்ன? பிசாசு என்றால் அர்த்தமென்ன? வையத்தலகை என்பதற்குத் திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசை நம்பி இருந்தாரா? என்பன போன்ற பல தர்க்க விவகாரங்கள், அக்குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும், அதன் அதிகாரத்தின் தலைப்புப்படி அக்குறளின் கருத்து "அநேக மக்களால் உண்டு என்று கருதப்பட்ட ஒரு விஷயத்தை, இல்லைஎன்று சொல்லுபவன் அறிவில்லாதவன்" என்று பொருள்படுவதாகவே வைத்துக்கொள்ளுவோம். இப்படி இருந்தாலும் இதிலிருந்து அவன்—அதாவது உலகத்தாரால் உண்டு என்பதை இல்லையென்று சொல்லுபவன், எதனால் அறிவில்லாதவன், என்று கண்டுபிடிக்கவேண்டியது இங்கு முக்கியமாகின்றது. எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுகின்றதற்காக, அவன் கொண்ட கருத்து குற்றமுடையதா? அல்லது பலர்—அநேகர்—மற்றவர்கள் எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயத்திற்கு, அது எப்படி இருந்தாலும் கண்மூடித்தனமாய்ப்பின்பற்றாமல்தனதுசொந்த அபிப்பிராயத்தைத் துணிந்து சொல்லவந்துவிட்டானே அந்த அடங்காத—கீழ்ப்படியாத—ஊருடன் ஒத்துப்போகாத—ஆணவமானதன்மையுடைய அந்தச் செய்கை குற்றமுடையதா? என்று யோசிக்க வேண்டியது இங்கு முக்கியமான காரியமாகும். ஆகவே உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக்கூறியதற்கு ஆதாரமாக, அவன் கொண்ட அபிப்பிராயம் குற்றம் என்று ஏற்படுமானால், இங்கு உலகத்தார் சொல்லுவதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு நாயனார் சொல்லி இருக்கவேண்டும். அல்லது அப்படி உலகத்தார் அபிப்பிராயத்துக்கு விரோதமாக, அபிப்பிராயப்பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச் சொல்லுவது என்கின்ற தன்மை குற்றமானதென்று கருதி நாயனார் சொல்லியிருந்தால், மனிதனுக்கு அவனவன் அபிப்பிராயத்திற்குச் சுதந்தரமில்லை என்று வள்ளுவர் கருதி அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். ஆகவே அக்குறளானது உலகமக்களில் பொது

வாகப் பெரும்பான்மையோரையோ அல்லது அறிவாளிகளாகிய பெரும் பான்மையோரையே, யாரைக் குறிப்பில் வைத்துக் கொண்டு நாயனார் சொல்லியிருந்தாலும், அக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமதபிப்பிராயம்.

ஆதலால் ஆத்மா என்கிற விஷயத்தைப்பற்றி யார் என்ன சொல்லியிருந்தாலும்—உலகமே என்ன கருத்துக் கொண்டிருந்தாலும் அதை லட்சியம் செய்யாமலேயே நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம்.

அதாவது, ஆத்மா என்பது ஒரு வஸ்து அல்ல, பொருள் அலல. அது சுதந்தரம், அறிவு, உணர்ச்சி முதலாகியவைகளை உடையதல்ல என்பதோடு, அது, ஒரு பெரிதும் அர்த்தமற்ற வார்த்தையென்றே நமக்குக் காணப்படுகின்றது. இங்கிலீஷ், தமிழ் அகராதிகளில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்கிலீஷில் சோல் (Soul) என்றும், சோல் என்பதற்கு அறிவு, யோசனை, ஆசை பிறக்கும் இடம், ஊக்கம், உள் சக்தி, மனித வர்க்கம், உயிர் என்கிற பொருள்கள் என்றும் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அது போலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை, முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவைகளில் இருந்து அதாவது இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்படவேண்டியது ஒரே ஒரு வார்த்தைதான் ஆகும். பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டியதிருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம் தானே அர்த்தம் புரியும்படியாய் இருக்கின்றன.

ஆகவே பிராணன் என்பது என்ன என்று பார்த்தால் அது ஒரு காற்று, (பிராணவாயு) ஹிருதயத்தில் இயங்கிக் கொண்டிருப்பது என்பதாகத்தான் அகராதிகளில் காணப்படுகின்றது.

இது இங்ஙனமிருக்க, இப்போது பழக்கத்தில் ஆத்மா என்றால் அது சரீரத்துக்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்துவென்றும், அது சூட்சும வஸ்துவென்றும், அதற்கு பிறப்பு, இறப்பு இல்லை என்றும், அது மனிதன் இறந்த பின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம் எடுப்பது என்றும், மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை, சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கின்றதென்றும், மற்றும் எத்தனையோ விதமாக அதைப்பற்றிப் பல மதங்களில் பல விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதாய் அறிகின்றோம்.

உதாரணம்என்னவென்றால், அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்திற்கு வேறாய் "என்சரீரம்" என்று சொல்லுவதன்மூலம், சரீரத்திற்கும் அதற்கும் வேறுபட்டதென்று சொல்லுவது போன்ற ஏதேதோ பிரிவுகள் காட்டி, அந்த ஆத்மா சரீரம் விட்டுப் பிரிந்த பிறகு அடையவேண்டிய—அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிரதானமாகக் கருதி, அதற்குத் தகுந்தபடி, அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப்பட்டு, அந்த மாதிரி ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன வென்றும், அதற்காகவே உலகத்தில் மனிதகோடிகளுக்கு மதம் அவசியமென்றும் சொல்லப்படுகின்றது.

ஆகவே இந்து, கிருஸ்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய மதங்களில் பௌத்த மதம் தவிர, மற்ற 'முக்கியமான' மூன்று மதங்களும், ஏறக்குறைய ஒரே கொள்கையில் ஆத்மாவையும், ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக்கொண்டிருக்கின்றன.

நிற்க, மேற்கண்ட ஆத்மா என்பதில்—1. மனித ஆத்மா மாத்திரம் தான் மேற்கண்ட மத சம்பந்தங்களுக்கு—அதாவது கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்குச் சேர்ந்ததா? அல்லது புல், பூண்டு, அணு, ஜெந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர் வாழ்வன முதலிய ஜெந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

2. இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்றைய ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

3. மனித ஆத்மா, மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை, சரீரத்தை விட்டுப் பிரிந்தபிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே, மற்றப் புல், பூண்டு, ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வன, அணு ஜந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தை விட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

4. இந்த ஆத்மாக்களில், மேற்கண்ட ஜந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள் தன்மைகள் முதலியவைகள்—அதாவது புலன் வித்தியாசங்கள், அறிவு வித்தியாசங்கள், உள்ளதுபோலவே, மனித ஜீவனும் மற்ற ஆத்மாக்கள்போலவே இருப்பதோடு, புலன் அறிவு விஷயத்தில் சற்று கூடுதல் வித்தியாசம், மாறுதல் முதலியவைகள் உடைய ஜந்துவா?

5. உலகத்திலுள்ளமேற்கண்ட ஜந்துக்கள் எல்லாம் வேறு, மனித ஜந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படியானவேறுபாட்டை உடைய ஜந்துவா மனிதன்?

எப்படியெனில் மேஜை, நாற்காலி, பெஞ்சு, ஊஞ்சல் என்று சொல்லப்படுவதான வஸ்துக்கள், மரம் என்னும் ஒரே மூலப்பொருளாலும், இரும்பு என்னும் ஒரே உப மூலப்பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும், தனித்தனி வடிவத்தோற்றத்தினால் தனித்தனிப் பெயரை உடையதாகி இருப்பது போலவே, உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம், நிலை முதலாகிய பேதத்தால், பலவிதப் பெயர்களை உடையதாயிருந்து, பலப்பல காரணங்களால் அதே வஸ்துக்கள் வேறு பல பெயர்களையும் அடைந்தாலும், முடிவில் அவற்றின் மூலப்பொருள்களின் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்துவாகவேதான் இருக்கும்.

இதுபோலவேதான் ஜீவர்கள் என்கின்ற "உயிர்"ப் பிராணிகள் எல்லாம், உருவத்தில்—தோற்றத்தில் வேறு வேறு வகையாய்—பெயர்கள் சொல்லப்பட்டாலும், அவற்றின் மூலப்பொருள்கள் ஒன்றேயாகும். அதாவது மரத்தையே மூலப்பொருளாய்க் கொண்ட

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

அவர்களுக்குப் பரிசு!

✯

அறிவாளிகள் அடியெடுத்து வைக்கப் பயப்படும் இடத்தில் முட்டாள்கள் தாராளமாகப்போய் உலவி விட்டு வருகிறார்கள்.

(ஆங்கிலப் பழமொழி)

*　　　*

பிரஜா உற்பத்திக் கலையைப்பற்றி பலர்—பலவிதமாக ஏடு தீட்டியுள்ளனர். அந்தப் பலரும் தாம் தாம் கண்டறிந்தவையே முடிந்த முடிபென்றும் கூறுகின்றனர்.

பிரஜா உற்பத்திக்கலையை சரியான முறையில் ஆராய்ந்து, அதில் இன்ன இன்ன உண்மையைக் கண்டறிந்தேன் எனக்கூறி, எந்த அறிஞரும் இதுநாள் வரை முன் வராதது மட்டுமல்ல—இதுபற்றியே வாய்திறவாதும் இருந்துவிட்டனர், பலருடைய தூற்றுதலுக்கு அஞ்சி!

ஆகவே-அறிவாளிகள் அடியெடுத்து வைக்க அஞ்சிய அந்த இடத்திலே, அரைகுறை பேர்வழிகள், "கற்ற புலமையைக்காட்ட தக்கசமயமிது" எனக் கூறிப் பிரவேசித்துவிட்டனர்.

மேலை நாட்டார் இந்தப் பிரஜோற்பத்திக் கலையின் ஆராய்ச்சியில் நம்மைவிட எவ்வளவோ முன்னேறி விட்டதோடு—பலவிரிவான விளக்க ஏடுகளும் வெளியிட்டுள்ளனர்.

நம் நாட்டிலும் இது போன்ற ஏடுகள் தீட்டினோர் பலர்.

அந்த ஏடுகள் பெரிதும் காம சாத்திரக்கலையைக் கற்றுக் கொடுப்பதாகவே தோன்றுவதால்—கற்றோர் என்போர் அதைக்கையில் தொடவும் கூசுகின்றனர்.

இந்த வரிசையில் சில காலத்துக்கு முன்பு ஒரு தமிழ்ப் புத்தகம் வெளியானது. புத்தகத்தின் பெயர், "குழந்தை எப்படிப்பிறக்கிறது" (ஆசிரியர் பொ. திரிகூடசுந்தரம்)

இந்தப்புத்தகம் வெளியானதுமே பார்க்கநேர்ந்தது. புத்தகத்தின் சில ஏடுகளைப் புரட்டிய உடனேயே இது அரைகுறை ஆசாமிகளின் ஆராய்ச்சி எனத் தெரியவந்தது-என்றாலும் காலப்போக்கிலே இதன் ஆசிரியரே தாம் இப்படி ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டமைக்காக வருந்துவார் என எண்ணினேன். மேலும் இப்புத்தகம்பற்றி இடைசைப் புலவர்போன்ற பெரியோர்களும், "பொது ஜனங்களுக்கு ஏமாந்த சோணகிரிப்பட்டம் சூட்டி; புத்தக விற்பனையின் மூலம் லட்சக்கணக்கான பணத்தைக் கொள்ளை அடிக்கிறார்கள்" என்றும் கூறினார்கள்.

ஆனால்—தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற பெயரிலே ஒரு கழகம் வேலை செய்கிறதே அக்கழகம் சமீபத்தில் (மூன்று வாரங்களுக்கு முன்பு) திருவாரூரில் இரண்டாவது தமிழ்த்திருநாள் கொண்டாடி; எந்த ஏடு நாட்டு மக்களுக்குக் கேடு புரிவதாக உள்ளது எனப் புலவர் போன்றார் வெறுத்தொதுக்கினார்களோ அந்த ஏட்டிற்கு அதாவது குழந்தை எப்படிப்பிறக்கிறது என்ற புத்தகத்துக்குப் பரிசளித்துள்ளனர்.

பரிசு ஒரு பக்கமிருக்கட்டும், அந்தப் புத்தகத்தின் தன்மையைபார்ப்போம்.

*　　　*

பலநாள் அரசையும் வேம்பையும் வலம் வந்து—அடிவயிற்றைத் தடவிப் பார்க்க, அதிலும் முயற்சி தோல்வி எனக் கண்டு-ராமேஸ்வர யாத்திரைக்குக் கிளம்பும் தம்பதிகளுக்கோ அல்லது வாலிப வயதினருக்கோ இப்புத்தகம் எழுதப்படவில்லைஎன்பதை,

"அன்பார்ந்த குழந்தைகளே! உங்களுக்கு இந்தப் புஸ்தகத்தை சந்தோஷத்துடன் அளிக்கிறேன்" என்ற ஆசிரியரின் முன்னுரையிலிருந்துகண்டு கொள்ளலாம்.

*　　　*

இந்த ஆசிரியருடைய பத்து வயதுப் பெண் குழந்தை ஒருநாள் இவரிடம் வந்து, "தங்கச்சி அம்மா வயிற்றிலிருந்து எப்படி வந்தாள்"— என்று கேட்க, ஆசிரியரும் குழந்தை பிறப்பதைப்பற்றி விவரமாகச் சொன்னாராம்.

விவரமாகச் சொன்னதாக அவர் பெருமையடித்து எழுதுகிறார், ஆனால் அதுநமக்குவிரசமாகத் தோன்றுகிறது.

குமரனைக் குளத்தங் கரைக்குக் கூட்டிச் சென்று, அங்கு குளித்திடும்—குமரியைக் காட்டி, கூர்ந்து பார்! ஆழ்ந்து பார்! எனக் கூறிடும் குறைமதி படைத்தோனின் செயலைப்போல—ஆசிரியர் தாம் பெற்ற மகளிடத்தில்

"ஆண் பெண் குறி பற்றிய விளக்கங்கள், சுக்கில சுரோணித சங்கமம்! கோழிமேல் சேவல்......! பசு-காளை காதல் நாடகம்," இவைபற்றி, எதிரே இருப்பது பெண் என்பதையும் மறந்து விளக்கிப் பேசுகிறார்—......

"ஆரஎன்னைத் தழுவாயோ
　　　அணி மார்பில் சேர்க்காயோ"
"குழல்கோதி முடிக்காயோ
　　　கொஞ்சி முத்தம் தாராயோ"
"செம்பவள இதழினிலே
　　　சேர்த்திடாயோ என் இதழை"

என்று ஆண்டாள் பக்தி ரசத்தில் மயங்கி, தான் பரமன் துதி பாடுகிறோமா அல்லது பள்ளியறைத் துதி பாடுகிறோமா என்பதையும் மறந்து பாடினாளாமே—அதைப்போல — ஆசிரியர் தன் 10-வயதுப் பெண்ணிடம் சொல்லாடல் நடத்துகிறார்.

*　　　*

"சிசுக்கள், தீவிர நரம்புக் கிளர்ச்சி உண்டாகக்கூடியவர்களாய் இருக்கின்றனர். தாயின சாந்தமும் அமைதியான ஒழுக்கமும் குழந்தைக்குச் சொல்லி முடியாத தேவை. (Health And-Healing பக்கம் 170)" என்று அறிஞர் இ. ஜி. உவைட் கூறுகிறார்.

நரம்புக் கிளர்ச்சி உண்டாகாதவாறு தாயின் அமைதியான ஒழுக்கமும் சாந்தமும் தேவைப்படும். 'குழந்தை' பருவத்திலுள்ள பெண் பிள்ளையிடந் தான் தவறான கருத்துக்களை ஊட்டுகிறார் ஆசிரியர்.

குழந்தை பிறக்கும் விதத்தைப் பற்றிக் குழந்தையிடம் சொல்லாடல் நடத்தும் ஆசிரியருக்கு, ஒழுக்கமான வார்த்தைகள் கிடைக்கவில்லையோ அல்லது—

"சித்திரத்தில் நிர்வாணத்தைப் பார்த்துப் பழகிக்கொண்டவன், பிரத்தியட்சத்தில் பார்க்கும் நிர்வாணக் கோலத்தை, சித்திரத்தைப் பார்ப்பது போலவே பார்க்க முடியும்" என்ற 'ஹாவலரின்" வாக்கியத்தின்படி; தான் வாழ்க்கையில் அனுபவித்த இன்பங்களின் 'சுவை' குன்றாது கூறிவிட்டாரோ தெரியவில்லை.

குழந்தையைத் தூக்கித் தோள்மீது சாய்த்து அணைத்து முத்தமிடும் போது, அது மூக்கையோ கன்னத்தையோ கடித்துவிடுகிறதே, அந்தக் குழந்தையின் உள்ளம் தான், எத்தனையோ வயதடைந்த போதிலும் பெண்களிடம் இருக்கிறது." என்ற 'எமர்சன்' தத்துவப்படி. 'தன் 10 வயது பெண்ணிடமும்' குழந்தை உள்ளம்தான் இருக்கும் என எண்ணி அவர் கூறியிருந்தாலும் சரி!

பஞ்சணையில் கொஞ்சிப் பேசிடும் மொழியிலேயே தன் அஞ்சு வயதுக் குழந்தையிடம் யாராவது பேச முயற்சிப்பார்களா?

ஆனால் ஆசிரியர்—பேசுகிறார்.

இது போகட்டும்—குழந்தைகளுக்கு என எழுதப்பட்ட இந்தப் புத்தகத்திலே பெரியவர்களுக்கே சந்தேகந் தட்டும்படி பல இடங்கள் உள்ளன. அதில் ஒரு காட்சி!

"பாப்பா:—சேவற் கோழிக்கும் பெட்டைக் கோழிக்கும் வாலுக்கடியில் சிறு துவாரங்கள் இருப்பதாகச் சொன்னாயே, அதுமாதிரி காளை மாட்டுக்கும் பசுமாட்டுக்கும் இருக்கிறதோ அப்பா!"

பத்து வயதுப் பாப்பாவின் மேற்படி

ரோஜா முத்தையா

கேள்விக்கு ஆசிரியர் பதில் சொல்லுகிறார். பாப்பா கேட்டது துவாரம் இருக்கிறதா—இல்லையா என்று. ஆனால் ஆசிரியரோ! துவாரம் பற்றிய விளக்கமும் கொடுத்து மாட்டினத்தின் "போகவகை" யையும் கூறுகிறார். இதோ அது!

"அப்பா:—அம்மா! பசுமாட்டின் வாலினடியில் இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. ஒன்று, சாணமிடுந் துவாரம். மற்றொன்றின் வழியாகத்தான் மூத்திரம் பெய்யும். ஆனால் அந்தத் துவாரத்தின் அருகிலேயே வேறு ஒரு துவாரம் உண்டு. காளை மாட்டின் வாலடியில் சாணத் துவாரந்தான் உண்டு. ஆனால் அடிவயிற்றில் பின் கால்களின் பக்கத்தில் ஒரு சிறு குழாய் இருக்கிறது. காளைமாடு பசுமாட்டின் மேலே காலைப் போடும் போது; இந்தக்குழாய் பசுமாட்டின் மூத்திரத் துவாரத்தின் பக்கத்திலுள்ள துவாரத்தில் புகுந்து விடும். அப்பொழுது காளைமாட்டின் அடிவயிற்றில் தொங்கும் பீஜங்களிலிருந்து ஆண்தாதுவானது அந்தக் குழாய் வழியாகப் பசுவின் உடம்பில் சென்று அங்குள்ள சிறு முட்டையுடன் சேர்ந்துவிடும்!"

ஆசிரியர் மகளுக்குப் பதில்கூறிவிட்டார், ஆனால் நமக்குச்சந்தேகம்தோன்றுகிறது.

பசுவுக்குத் துவாரங்கள் இரண்டுதான் என்று கூறிய ஆசிரியர், குழாய் புகுந்து வரும் துவாரம் ஒன்று தனியாக இருப்பதைப் போல, அது பசுமாட்டின் மூத்திரத்துவாரத்தின் பக்கத்திலுள்ளதாகச் சொல்லியிருப்பதால். மேற்படி துவாரமானது மூத்திரத்துவாரத்தை விட்டு விலகி அதைத் தவிர்த்து மேலாகவோ, கீழாகவோ, பக்கவாட்டிலோ இருப்பதாக அல்லவா கருதத் தோன்றுகிறது!

இதுபற்றி முன்னரும் பலர் கண்டித்து எழுதினர், ஆனால் ஆசிரியர் வாய்மூடி மௌனியானார்.

மேலும், இதே மாதிரிதவறான கருத்தையே கொண்டு அப்புத்தகத்தின் 36-ம் பக்கத்திலும் "அம்மாவினுடைய மூத்திரத் துவாரத்துக்கு அருகேயுள்ள துவாரத்தில்" என்றுகூறி அம்மாவுக்கும் அபானத்துவாரத்தைநீக்கி, இரண்டு துவாரங்கள் பக்கம் பக்கமாக இருப்பது போன்று குறிப்பிடுகிறார்.

இந்தப் புதிய துவாரத்தை எப்படியோ சிருஷ்டித்துநம்மைத் திண்டாடவைக்கிறார் ஆசிரியர்.

நாமே திண்டாடும் போது பாப்பா புரிந்து விட்டதுபோல், வேறு ஒன்றும் குறுக்குக் கேள்விகேட்கவில்லை.

இத்தோடு விட்டு விட்டாரா!

அப்பாவின் ஆண்தாது அம்மாவின் முட்டைப்பையிலிருந்து வரும் சிறு முட்டையுடன் கலக்கும் விதம்—என தலைப்பிட்டுக் கொண்டு, அப்பா—அம்மா விஷயத்தையும் அம்பலத்துக்கு இழுக்கிறார்.

"ஆண்தாதுவும் பெண்முட்டையும் சேர்வதற்கு அம்மாவும்—அப்பாவும் ஒருவரைப்பார்த்து ஒருவர் படுத்துக் கொண்டால் போதுமானது"

என்று ஓரிடத்தில் கூறிவிட்டு பிறிதோரிடத்தில், "அம்மாவும்—அப்பாவும் நேருக்கு நேராகப்படுத்து அப்பாவின் ஆண்தாது அம்மாவின் உள்ளே போகும் பொழுது..."

அடடா! போதுமைய்யா! உன் விளக்கம் என்றுதான் கேட்கத் தோன்றுகிறது நமக்கு.

ஆனால், ஆசிரியரோ விளக்கமாக—நிறுத்தி—மெதுவாகவே—பத்து வயதுப் பாப்பாவிடம் கூறுகிறார்-பாப்பாவும் தலையசைத்துக் கேட்கிறது.

* *

அரைகுறை ஆசாமிகளின்ஆராய்ச்சி என்பதற்கு இதைவிட வேறு ஒரு விளக்கமும் தேவையில்லை!

* *

"பாடப்புத்தகங்களைப்போல குறிப்பிட்ட வயதுள்ளவர்களுக்குக் குறிப்பிட்ட முறையில் பிரஜா உற்பத்தியை விளக்க நூல்கள் எழுதி வெளியிட வேண்டுமே ஒழிய 'பெண்தானே!' என்று அபேதமாகக்கருதி, துணிவும் கொண்டு, எந்தப் புத்திசாலியும் கொக்கோகப்பிரசாரத்தைத் தொடங்கி விடக்கூடாது!"

என்ற இடைசைப் புலவரின் கருத்துரையையே; நம்மீது கோபித்து, "ஐயா! நீங்கள்தானே தமிழில் பிரஜா உற்பத்தி பற்றிப் புத்தகங்கள் அவ்வளவாக இல்லை என்று கூறினீர்கள், ஏதோ எனக்குத் தெரிந்ததை எழுதி வெளியிட்டால், இப்படியா எதிர்ப்புக் கிளப்புவது" எனக் குறை கூறும் ஆசிரியருக்கு எடுத்துக் காட்டுகிறோம்.

இவ்வளவு கேடு தரக்கூடிய புத்தகத்துக்கு தங்கள் வெறுப்பைக் காட்டுவதைவிட்டுத் தப் பரிசளித்ததிலிருந்து, தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் நோக்கத்தையும்..................பக்கத்துக்குப் பக்கம் ஆபாச வார்த்தைகள் ஆனந்தத் தாண்டவமிடும் இப் புத்தகத்திற்குத் தடை போடுவதற்குப் பதிலாக ரூ. 500 (சர்க்கார் பணத்திலிருந்து) நன்கொடை கொடுப்பதிலிருந்து இந்த அரசினரின் தன்மையையும் அறிந்துகொள்ள இந்த "பரிசளிப்பு வைபவம்" நமக்கொரு வாய்ப்பாக அமைகிறது.

* *

"தன்மான இயக்கத்தவரின் ஏடுகளுக்குத்தடை விதித்திடும் இவ்வரசினர்—இவ்வாபாச ஏடுகளை ஏன் நாட்டில் நடமாட விடுகின்றனர்?"

இதுபோல நம்மில் பலர் துணிந்து கேட்டும் விடலாம்.

கேட்டு என்ன பிரயோஜனம்!

இப்பொழுது நம் நாட்டில் "இராம இராஜ்ஜிய" ஒத்திகையல்லவா நடப்பதாகச் சொல்லுகிறார்கள்.

* *

தவம் செய்த சம்புகனின் தலையை இராமன் வெட்டினான், பார்ப்பனர் செய்யத்தகுதியுள்ள 'தவத்தை' மாற்று இனத்தவனான சம்புகனால் எப்படிச் செய்யப்படலாம் என்ற காரணத்தால்.

அதே அயோத்திய (அயோக்கிய) ராமனின் 'மாடல்' ஆட்சிதானே இப்பொழுது நடைபெறுகிறது!

அயோத்திய இராமனாவது "இன வேறுபாடு" கொண்டு ஆட்சி புரிந்தான். காங்கரசாரோ இராமனுக்கும் ஒருபடி முன்னேறி "கட்சிவேறுபாடு" கொண்டு ஆட்சி நடத்துகின்றனர்!

"நம்மைவிட நல்ல முறையில்—காவியங்களும்—ஏடுகளும் தீட்டி மக்கள் மனதில் மறுமலர்ச்சி கருத்துக்களைப் புகுத்துகிறார்களே!—இது கூடாது! அடக்கியேதான் தீரவேண்டும்"—என எண்ணி—நம் ஏடுகளுக்குத் தடை விதிக்கின்றனர், சம்புகனின் தலையை இராமன் வெட்டியதைப் போல! இராமனைவிட ஒரு படி மேலேறி விட்டது.

* *

நீதிக்கும்—நேர்மைக்கும் அவர்கள், "பிரிவு உபசாரம்" கொடுத்ததில் ஆச்சர்யமில்லை!

* *

அவர்கள் பாசறையிலுள்ளோர் மோசமான ஏடு தீட்டினும் "அவர்களுக்குப் பரிசு" அளிப்பதும்—நம்மவர்மீது தடை போடுவதுங்கண்டு நாம் சோடை நடுங்கிகளாய் விடவில்லை! அதற்கு மாறாக உதட்டிலே புன்சிரிப்புச் சிந்தி நிற்கிறோம் "எதற்கும் தயார்" என்ற காரணத்தால்!

—"தங்கவேலர்"

ஈரோட்டில் நல்லதம்பி வைரவிழா!

ஈரோடு 2-5-49.

ஈரோடு ஸ்டார் டாக்கிசில் 2-5-49 மாலை 6-மணிக்கு 'நல்லதம்பி' 60-வது நாள் வைரவிழா நகரசபைத் தலைவர் தோழர் S. K. சென்னியப்பக் கவுண்டர் தலைமையில் அறிஞர் C. N. அண்ணாதுரை முன்னிலையில் நடைபெற்றது.

ஸ்டார் டாக்கிசார் சார்பாக அறிஞருக்கு ஒரு வெள்ளித்தட்டும், அதன் ஊழியர்கள் சார்பாக ஒரு வரவேற்புப்பத்திரமும் வழங்கப்பட்டது. அறிஞர் பதிலுரை

[உரிமை ஆசிரியருக்கே]

தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

(முன் இதழ் தொடர்ச்சி)

அரசர், அரசியர், அதிகாரிகள் ஆகியோரை வணங்குதல் அச்சத்தினாலும், நன்மையினாலுமே. தாழ்த்தப்பட்டமக்கள் மற்றவர்களை வணங்குதல் பெரும்பாலும் அச்சத்தினாலேயேயாகும். இரவலர்,கொடுப்போரை வணங்குதல் நன்மையினாலேயேயாகும். அரசன் ,அரசியை—தேவன், தேவி; இறைவன், இறைவி எனக் கூறுதலே அரசவணக்கத்தை வலியுறுத்தும். ஆகவே, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னும் நால்வரும் ஆசிரியர்தொல்காப்பியர் காலத்துக்கு முன்,சீரும் சிறப்புடன் தமிழகத்தையாண்டு வந்த அரசர்களேயாவர். நாட்டை ஆண்டவர் என்பதைக் குறிக்கவே கருப்பொருளுடன் கூறாது நிலத்துடன் கூறினார். இஃதொன்றே தமிழர்களின் செய்ந்நன்றியறியுங் குணத்திற்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பண்டு தமிழகம் இன்றுள்ள எல்லைக்குள் அடங்கியில்லை. தென் பெருங்கடலில் 'பெருவளநாடு' என்னும் பெரிய நிலப்பரப்பானது மடகாஸ்கர் வரையிலும் பரவியிருந்தது. அது பஃறுளியாறு, குமரியாறு முதலிய பல ஆறுகளையும், மணிமலை, குமரிமலை, பன்மலைத்தொடர் முதலிய பல மலைகளையும் உடையதாய் இருந்தது. அதைக் குமரிக் கண்டம் எனவும் வழங்கினர். வங்காளக் குடாக் கடல், சாவக முதலிய கிழக்கிந்தியத் தீவுகளடங்கக் 'கிழக்குநாடு' எனப் பெயருடையநாடு முழுதும் வயல் வளமுள்ள மருதவளநாடாக இருந்தது. வடக்கில் விந்த மலை எல்லையாக இருந்தது.

அப்பெரிய தமிழகத்தைக் காடு, மலை, வயல், கடற்கரையாகப் பகுத்து அதனதன் பயன் கொண்டு வாழ்ந்து வந்தனர் நம் முன்னையோர். அந்நிலங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தலைவரும், அவர் கீழ்ப் பலநாட்டுப் தலைவரும், தமிழக முழுமைக்கும் ஒரு மாபெருந் தலைவருமாக இருந்து தமிழகத்தை இனிது ஆண்டு வந்தனர்.

காடாகிய முல்லை நிலத் தலைவன் தமிழகத்திலுள்ள காடுகள் முழுமைக்கும் தலைவனாவான். காடுகளைச் சீர்திருத்திக் காத்துப் பயன்பெறுவிப்பது அவன்கடமை. இவ்வாறே மற்ற நிலத் தலைவர்களும். அதாவது இன்றுள்ள கான்றுறை (காட்டிலாகா) நிலவரித்துறை, வாரித்துறை (கடற்றுறையிலாகா) முதலியன போலப் பிரித்தாண்டு வந்தனர்.

மாபெருந் தலைவர் மருத நிலத்தில் கோட்டை கொத்தளங்களமைத்துக் கொண்டிருந்து தமிழகத்தை இனிது ஆண்டு வந்தனர். அம்மாபெருந் தலைவனுக்குப் பழம் பெயர் வேந்தன் என்பது. வேந்தனையே வடவர் இந்திரன் என்றனர். இந்திரன்—அரசன். நர+இந்திரன்—நரேந்திரன்—மக்களரசன். மிருக+இந்திரன்-மிருகேந்திரன்—விலங்கரசன், கவி+இந்திரன்—கவீந்திரன்—கவியரசன் எனக் காண்க. மக்களுக்கரசன், விலங்குகளுக்கரசன், கவிகளுக்கரசன் என்பதாம். கருடனைப் பட்சிராஜன் என்பதுங் காண்க.

கடற்கரைத் தலைவர், கடற்கரைப் பாதுகாவலோடு, வெளி நாடுகளுடன் வாணிகமும் செய்து வந்தனர். இவரைக் கடற்பெயரால் வருணன் என்றனர். வருணன்—வர்+உ+அணம். வர்—வருதல்; வருகிறேன், வருவான் எனக் காண்க. உ—சாரியை. அணம்—அணவுதல், வளைதல். வருணம்—வந்து வளைதல், நிலத்தை வந்து வளைதல் என்பது பொருள். வளைகடல் என்பது காண்க. செல்வம்-செல்வன், காப்பியம்—காப்பியன் என்பதுபோல் வருணம்—வருணன் என்றானது. வருணன்—கடல் மன்னன். வருணனை மேற்றிசைக் காவலனாகக் கூறுவதும், (அட்டதிக்குப்பாலகரிலொருவன்) கடற்றுறைத்தலைவனாகிய வருணன், தமிழகத்தின் மேல்பாலிருந்து மேனாடுகளுடன் வாணிகம் செய்து வந்ததை வலியுறுத்தும். வேந்தன், வருணன் என்னும் பெயர்கள் வழிவழி வழங்கிய பெயர்களாகும்.

மாயோன் முல்லைநிலமன்னன். சேயோன் குறிஞ்சி நிலமன்னன். இவ்விருவரும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு மக்களுக்கு வேண்டிய எல்லா நலங்களும் செய்து மிக்க சீரும் சிறப்புடன் அந்நிலங்களை ஆண்டு வந்தவராவர். அதனால், அந்நில மக்கள் அவர்களை வாழ்த்தி வணங்கி வந்தனர். அகப்பொருட்குப் பயன்படும் நிலமுதற்பொருள் கூறப்புகுந்த தொல்காப்பியர், கருப்பொருளாகிய அத்தலைவர்களை நிலமுதலில் வைத்து, மாபெருந்தலைவனான வேந்தன், கடலரசனான வருணன் இவர்களோடு, அம்முல்லை,குறிஞ்சித் தலைவர்களையும் சேர்த்து,

"மாயோன் மேய காடுறை
உலகமும்
சேயோன் மேய மைவரை
உலகமும்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

வழங்கினார்.

தோழர் S. R. சந்தானம் நன்றி கூறினார்.

அன்று மாலை 5மணிக்கு அறிஞருக்கு ஒரு தேநீர் விருந்து ஸ்டார் டாக்கீசாரால் நடத்தப்பட்டது. ஊர்ப் பிரமுகர் பலரும் அதில் கலந்து கொண்டனர்.

குடி அரசு

7—5—49 சனிக்கிழமை.

மந்திரிசபைப் பேரம்!

"அத்தியாயம் முடிவுற்றது" இதைக் கூறியவர் தோழர் பிரகாசம் அய்யர். மந்திரிசபை எவ்வளவு அகலமாக நீளும்—எவ்வளவு அகலமாக நீட்ட முடியும் என்கிற ரப்பர் இழுப்புப் போட்டியில், ஒரு முனையில் நின்று இழுத்துக் கொண்டிருந்த தோழர் பிரகாசம் தான், சரியாக ஒரு மாச இழுப்புக்குப் பிறகு, அத்தியாயம் முடிவுற்றது என்று சோகம் வழிந்து கசியக் கூறியிருக்கிறார் இந்த மாதம் 2-ந் தேதி. தோழர் பிரகாசத்திற்குப் பின்னால் நின்று கொண்டு, அவருக்குத் தலையால் முட்டுக்கொடுத்து உதவி புரிந்து வந்த சகாத் தோழர் சுப்பராயனோ, இந்தப் போட்டி முடிவில் வாய் மூடி மௌனியாகிவிட்டார். ஒருவேளை பலமாக முட்டுக் கொடுத்ததால் ஏற்பட்டிருக்கும் மூச்சுத் திணறல் காரணமாக இருந்தாலும் இருக்கலாம்.

ரப்பர் இழுப்புப் போட்டியில் சுப்பராயனுக்காக வேலை செய்து வந்த தோழர் காமராஜரும், சுப்பராயன் நிலையைத்தான் அடைந்திருக்கிறார். காமராஜரின் சகாவாக காமராஜரால் காட்டப்பட்டு வரும் பிரதமர் ராஜாவோ "நடக்கிறபடி நடக்கட்டும், அசரப் போட்டுவிடுவோம்" என்கிற சலிப்பை அடைந்துவிட்டார்.

சட்டசபை காங்கரஸ் கட்சித் தலைவராக பிடித்துவைக்கப்பட்ட தோழர் ராஜா அவர்களுக்கு, மற்ற மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு சட்டப்படி உண்டு என்றாலும், நியாயப்படி இல்லை என்கிற கருத்துத்தான், இந்தப் போட்டிக்கு அடிப்படை என்று நாம் விளக்கினால் அது தவறாகமாட்டாது. போட்டியில் முன்னணி...ல் நின்றவர்கள், முக்கியமாகத் ...ழர்கள் பிரகாசமும், காமராஜ... என்றால், அந்த இரண்டு ...ருடைய மனப்பான்மையும், "மற்ற மந்திரிகள் எல்லாம் நம் இஷ்டப்படிதான் பொறுக்கப்பட வேண்டும்" என்கிற காரியத்தில் தீவிரமாகவே இருந்து வந்திருக்கிறது என்பதைத்தான், மற்ற மந்திரிகளின் நியமனங்களும், ஒரு மாதப் பேட்டிகளும், பேச்சுகளும் காட்டுகின்றன.

நாணயத்திற்குச் சீட்டுகொடுத்து வழியனுப்பிய, மெம்பர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் காங்கரஸ் சட்டசபைக் கட்சியைத் துணையாகக் கொண்டு, "ஒழுங்கான ஒருவர் உயர் பதவியிலிருப்பதா? அவரை ஒழிப்பதே எனது லட்சியம் என்கிற லட்சியப் பாதைகண்ட" தோழர் காமராஜர், என்முயற்சியால்—என் லட்சியம் நிறைவேறியதால் இடம் பெற்ற தோழர் ராஜா, என் இஷ்டப்படி அல்லவா நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்.

9 பேர் மெஜாரிட்டியால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பிரதமர் ராஜா, பலமான மைனாரிட்டியாய்க் காணப்பட்டாலும், பார்ப்பனீய ஆதிக்கம் 100-க்கு 100-ஆக உள்ள எனது கோஷ்டிக்கு மதிப்புக் கொடுத்து, என் இஷ்டப்படி அல்லவா நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறார் தோழர் பிரகாசம்.

இந்த இரண்டுபேருடைய நினைப்பும் நியாயந்தானா? நிறைவேற வேண்டியது தானா? என்பவைகளைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லப்போவதில்லை. ஆனால் தோழர்கள் பிரகாசமும் காமராஜரும் இப்படி நினைப்பதினால் தான்—நினைப்பைச் செயலாக்கிவிடவேண்டுமென்று துணிந்ததினால் தான், இந்த "மியூசிக்சேர்" போட்டியே உண்டானது என்று தான் கூறுகிறோம்.

தோழா காமராஜர் மேலிடத்தாரால் கரிபூசப்பட்டபிறகு, அதாவது சுப்பராயனோடு பங்கு விகிதாச்சாரம்பேசி, ஒப்பந்தம் செய்து கொண்டு டில்லிக்குப் போனவுடன், பழைய மந்திரிகளில் பலரும் இடம் பெறவேண்டும் என்று மேலிடத்தார் சொல்லிய பிறகு—புதிதாகச் சேர்ப்பதிலும் கோஷ்டிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று ஆணையிட்ட பிறகு, "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு" என்பதுபோல் புத்திவந்து திருந்தி இருக்க வேண்டும். ஆனால் அதை எப்படி நம் காமராஜரிடம் எதிர்பார்க்க முடியும்? அவரோ, பாக்கியுள்ள இடங்களிலாவது, 'வேண்டுமானால் நாற்காலிகளின் எண்ணிக்கையைப் பெருக்கியாவது, நமக்குப் பூரண செல்வாக்கு இருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டு விடவேண்டும் என்று ஆசைப்பட்டார். அந்தோ! அந்த ஆசையிலும் இப்போது மண்!

உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்து ஓடிப்போன தோழர் பிரகாசம்—தானாகவும், தனக்குப் பதிலாக வேறு நபரை நிறுத்தியும் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பிரகாசம், மீண்டும் மீண்டும் மந்திரி நாற்காலியை வலம் வருவதற்கு ஆசைப்படுவது—அதற்காகப் பேரம் பேசுவது எவ்வளவு மோசமான பேராசை! அவரோ, நான் வேறு அத்தியாயத்திற்குப் போகிறேன் என்கிறார் இப்போது.

ஆச்சாரியாருக்கு எதிராகப் பிரகாசம் பிரதமராக்கப்பட்டபோது, காங்கரசிலுள்ள 'கோஷ்டிகளை' அவர் எப்படி, எவ்வளவு கேவலமாகக் கண்டித்தார் என்பதும், தான் பிரதமர் என்றால் மற்ற மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தன்னைத் தவிர வேறு யாருக்கு உண்டு? என்று கேட்டிருக்கிறார் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அன்று அப்படிச் சட்டம் பேசிய பிரகாசம்தான், இன்று கோஷ்டியின் எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதாச்சாரம் வேண்டும் என்கிறார். (பிறவியிலேயே தனக்குத் தனிச் சட்டம் என்று கூறும் இனமல்லவா?)

தோழர் பிரகாசம் அவர்கள் ஆரம்பித்திருக்கும் அடுத்த அத்தியாயம், மேலிடத்தாருக்குக் காவடி. இந்தக் காவடி, பார்லிமெண்டரி போர்டுக்கு ஒரு மகஜர் என்கிற பெயரால், பிரதமரிடம் கொடுக்கப்பட்டு, பத்திரிகைகளிலும் வெளியாக்கப்பட்டிருக்கிறது.

ஆச்சாரியார் மந்திரிசபையில் ஒரு மந்திரியாக இருந்த காலத்திலும், பின்பு அவரே பிரதமராக ஆகிய காலத்திலும், தோழர் பிரகாசம் அவர்களுக்கு எந்த அளவு மதிப்பு இருந்தது என்பதும், அவர் எந்த அளவுக்கு நாணயமாய் நடந்துகொண்டார் என்பதும் இந்த நாடு அறியும். ஆகவே "பாம்பின் கால் பாம்பறியும்" என்ற நியதியை ஒட்டியோ; என்னவோ பழைய—புதிய மந்திரிகளான ஏழுபேரைக் குறித்தும் குற்றஞ்சாட்டிப், பிரகாசம் அவர்கள் இந்த மகஜருடன், அச்சிட்டுக் கொடுத்திருக்கிறாராம். இவர் எண்ணம் என்ன, உண்மையிலேயே நாட்டு நலனில் உள்ள அக்கரையின் விளைவா இது, என்கிற சந்தேகந்தானே எவருக்கும்வரும்? உண்மையாகவே அந்தமந்திரிகள் செய்திருக்கும் குற்றங்களைத் தோழர் பிரகாசம் தெரிந்திருக்கின்றார் என்றால், அதை வெளிப்படுத்த வேண்டியது எப்போது? திருத்தியிருக்கத் தகுந்த குற்றங்களாயிருந்தால் திருத்தியோ, திருத்த இயலாதென்றால் மக்களைக்கொண்டு அவர்களை வீட்டுக் கனுப்பியோ அல்லவா இதற்கு முன்னாலேயே செய்திருக்கவேண்டும்? மந்திரி நாற்காலியில் எனக்கு—என்னைச் சேர்ந்தவர்களுக்குஎத்தனைஎன்று இதுநாள்வரை பேரம் பேசிவிட்டு, இப்போது அந்தப் பேரம் பலிக்காதநிலையில், "குற்றங்" கூறினால் இது, மிரட்டல் வேலையே(Black mail) தவிர வேறென்ன? என்று தானே எவரும் எண்ணுவர்.

பிரகாசத்தினுடைய யோக்கியதையை இந்த மகஜர் வெளிப்படுத்துவதோடு, தோழர் காமராஜரின் இனத்துரோக வேலையையும் இந்த மகஜர் வெளியாக்கி இருக்கிறது. இந்த மந்திரி சபையில் முழுப்பார்ப்பனர் டி. விசுவனாதத்திற்கும், அரைப்பார்ப்பனர் சுப்பராயனுக்கும் இடந்தேடிக்கொடுக்க எப்படியெல்லாம் காமராஜர் கஜகர்ணம் போட்டிருக்கிறார் என்பதையும் காட்டுகிறார் தோழர் பிரகாசம். இனவுரிமையை அடகுவைத்து வாழ்வதே இகவாழ்வு என்று கண்டு கொண்ட காமராஜர் இதனால் பின் வாங்கி விடவாபோகிறார்?

இன்றைய நிலையில் பிரதமர் ராஜா, மந்திரிசபை விஸ்தரிப்புக்கு, பிரகாசம் யோசனைப்படி தற்கால முற்றுப்புள்ளிவைத்து, பார்லிமெண்டரி போர்டின் யோசனை கேட்டுள்ளார் என்பதை யூகிக்கும் போது, எடுத்ததற்கெல்லாம் இப்படி வடக்கே காவடி எடுக்கும் பிழைப்புக் கண்டு நம்மால் வெட்கப்படாமலிருக்க முடியவில்லை. இந்தத் தற்காலீக முற்றுப்புள்ளியை நிரந்தர முற்றுப்புள்ளியாக்கி, நாட்டின் நலன் கருதி ஆட்சி செய்ய வேண்டுகிறோம். மூன்று பேர் மிக மிகத் திறம்பட ஆட்சி செலுத்திய இடத்தில்தான் இன்றைய இடநெருக்கடியை உண்டு பண்ணியுள்ளனர் என்பதனையும் நினைவூட்டுகிறோம். "எடுப்பார் கைப்பிள்ளையாய்" இருந்து 'எல்லோருக்கும் நல்ல பிள்ளையாய்' நடக்கஎண்ணி, உருட்டல் மிரட்டலுக்குப் பயந்து பாராங்கல்லில் மோதும் நிலையை அடைய வேண்டாமெனவும்எச்சரிக்கிறோம். உண்மையிலேயே கூடிருந்து கவிழ்க்கச் சதிசெய்பவர் இன்று மந்திரியாக இருந்தால் அவரை விலக்கி, ஒத்துழைக்கும் நல்லவரைக் கொண்டு 'நல்லாட்சி' எனப்பெயர் பெறும்படி ஆட்சி நடத்துங்கள் என அவருக்கு ஆலோசனை கூறுகிறோம்.

'நல்ல ஆட்சி' நான்கு நாள் நடத்தினாலும் நல்லது. நாற்காலிக்குப் பசை போடக் கருதி நாற்றம் உண்டாக்கவேண்டாம்!

துக்கடா.

(*○*)

ஆரிய மதம் என்பதற்குப் பழைய ஆங்கில அகராதியில் கிருஸ்துவ தத்துவத்தை மறுப்பது. அதாவது,

Ariyanism-Dinial of the Divinity of Christ என்பதாக உரை எழுதப்பட்டிருக்கிறது.

Globe Dictionary பக்கம் 24—

நாயக்க மன்னர்களும் இஸ்லாம் மன்னர்களும்.

-(❁)-

விஜயநகர மன்னனாகிய முதலாம் தேவராய நாயக்கர், தன் மகளை பாமானி சுல்த்தானாகிய பிரோஸஷாவுக்கு அனேக சீதனங்களுடன் திருமணம் செய்து கொடுத்தான்.

பார்ப்பனர்களின் தமிழ்ப் பற்று.

பார்ப்பனர் இல்லங்களுக்கும், பார்ப்பனர் தொழில் கூடங்களுக்கும் இடும் பெயர்கள்.

அம்பாபவன்.
ஆரியபவன்.
ஆனந்தபவன்.
இந்திரபவன்.
ஈஸ்வரிலாட்ஜ்.
உடுப்பிலாட்ஜ்.
எவரஸ்ட்டு ஓட்டல்.
கிருஷ்ணபவன்.
கோதண்ட விலாஸ்.
சண்முக விலாஸ்.
சென்ட்ரல் லாட்ஜ்.
டூரிஸ்டஞ்சு.
மாடர்ன்கப்பே.
ராஜேந்திரபவன்.
ராமவிலாஸ் காப்பி ஓட்டல்.
லஞ்சுஹோம்.
வசந்தா ஓட்டல்.
வெங்கிடேஷபவன்.
ஸ்ரீநிவாஸ்.

இப்படியாக வடமொழி, இங்கிலீஸ் இவைகளில்தான் அவர்கள் மொழிப்பற்று இருக்குமே தவிர, தமிழில் இருக்காது. தமிழை நீச்ச மொழி என்பது மனுநூல்.

இந்தப்படியான ஆரியர்கள் தன்மையையே திராவிடனும் காப்பி அடித்து பேர் வைத்துக் கொள்ளுகிறான்.

பார்ப்பனர்களின் நாட்டுப் பற்று.

பார்ப்பனர்கள், அவர்கள் திராவிட நாட்டில் குடி இருந்தாலும், அவர்களது நாடு பரத கண்டம், பாரத தேசம், ஜம்பூத்தீபம், ஆரியாவர்த்தம், இந்திரப் பிரஸ்தம் என்பதாக வடநாட்டு ஆரியப் பெயர்களால் அழைப்பதைத்தான் தங்கள் நாட்டுப் பற்றாகக் கொள்ளுகிறார்களே ஒழிய, திராவிடநாடு தமிழ்நாடு என்று சொல்லவே மாட்டார்கள்.

வடமொழி தவிர்த்த மற்ற மொழி பேசும் நாடு மிலேச்ச நாடு என்பது மனு சாஸ்திரம்.

இந்துமகா சபை ஏன்?

—(▭)—

ஆரியதர்ம சபையும், பிராமண மகாசபையும், வர்ணாச்சிரம மகா

இங்கர்சால் சொற்பொழிவு

ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

புனித ஆவியால் நிரம்பி, கிருஸ்து மதத்தின் இடைக்காலத்தில் வாழ்ந்தமக்கள், புதைகுழிக்கு—மயானத்திற்கு அப்பாலுள்ள மேலுலகத்தை அறிந்திருந்தார்களேயன்றி, இவ்வுலகத்தைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்கள் பூமி தட்டை என்றும், பூமி தோன்றி அய்யாயிரம் ஆண்டுகள்தான் ஆகியிருக்க வேண்டுமென்றும், தாரகைகளின் மினுக்கு இரவை அழகுபடுத்தத் தான் ஏற்பட்டது என்றும் எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில் கிருஸ்து மதத்தில் பதினைந்து நூற்றாண்டுகள்வரை ஒரு வான ஆராய்ச்சியாளன்கூட, கிருஸ்து மதத்தின் சார்பாகத் தோன்றியது கிடையாது. கிருஸ்து கொள்கையைக் கடைப் பிடிக்க ஒருவர்கூட பூமியின் உருவத்தை அறிந்திருக்கவில்லை.

உலகம் உருண்டை என்பதை உணர்த்தியது, ஒரு போப்பாண்டவராலோ அல்லது ஒரு குருவாலோ அல்ல; ஒரு குரு பக்தராலல்ல; புரியாத 'ஒன்றினால்' அல்லது 'கடவுள்' எனப்பட்டவராலல்ல; ஒரு மீகாமனால் கண்டு பிடிக்கப்பட்டு உணர்த்தப்பட்டது. 'மாஜலன்' என்பார் 'செவில்லே' என்ற ஸ்பானிய நாட்டுத் துறை முகத்தினின்றும் ஆகஸ்டு 10-ந் தேதி 1519-ல் விட்டு, கப்பலில் மேற்கே சென்று, மேற்குப் பக்கமாகவே கப்பலைச் செலுத்தி, செலுத்தி, கடைசியாக ஆரம்பித்த இடமான செவில்லே என்ற துறைமுகத்துக்கே, செப்டம்பர் 7-ந் தேதி 1522-ல் வந்து சேர்ந்தார்.

உலகத்தை வலம்வந்துவிட்டார். உலகம் உருண்டை என்பதை உணர்ந்தார். வேதத்திற்கும் மீகாமனுக்கும்—மீகாமனின் உண்மைக்கும் இடையே ஒரு முரண்பாடு தோன்றியது. உண்மை மீகாமனின் பக்கமே நின்றது.

1543-ல் காபர்நிகஸ் என்ற அறிஞர் 'மேலுலகப் பொருட்களின் புரட்சி' என்ற அவர் புத்தகத்தை வெளியிட்டார்.

தாரகைகளின் பெரும் தோற்றங்களைப்பற்றியும், வான மண்டல இடை வெளியைப்பற்றியும், உருத் தெரியாத இவ்வுலகைப்பற்றியும் ஒரு சிறிது அவர் அறிந்திருந்தார்.

பதினாறாம் நூற்றாண்டின் முடிவில் உலகம் உற்பத்தி செய்தவை களிலேயே, ஒரு சிறந்த அறிஞரான 'புரூனோ' என்பார், தன் கருத்துக்களை மக்களுக்குக் கொடுத்தார். உலகங்களின் பன்மையைப் போதித்தார். அவர் ஒரு உண்மைவாதி, நாஸ்தீகர், நேர்மையான மனிதன். அவர் கத்தோலிக்க ஆலயத்தை 'மிருக ஆட்சி சாலை' என்று அறைந்தார். அவரைப் பல ஆண்டு காலம் சிறையிலடைத்திருந்தார்கள்; அவர் கொள்கையை மாற்றிக்கொள்ளச் செய்ய முயன்றார்கள்; குற்றவாளியாகக்காட்டப்படுத்தினார்கள்; கடைசியாக பிப்ரவரி மாதம் 16-ந் தேதி 1600-ல், புனித ஆவியால் நிரம்பியவர்களெனப்படுவோரால், உயிருடன் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டார்: அவர் கொளுத்தப்பட்ட இடத்தில் இப்போது ஒரு துன்ப நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டு இருக்கிறது. புரூனோ பெருமைமிக்க, கொள்கைக்காக இன்னலுற்றவர்களில் தலைசிறந்தவராவர். அவர் ஒருவரே தான் உணர்ந்த உண்மைக்காக மரண இன்னலுற்றவர். கொள்கைக்காக இன்னலுற்ற அவர் மோட்ச இலாபம் பெறாமல், நரகத்தில் மூடப்படாமல், கடவுளால் கருணை காட்டப்படாமல் போனவராகும். அவர் புனிதமானவர்களைக் காட்டினும் உன்னதமானவர்; நபிகளைக் காட்டினும் பெருமையானவர்; தேவனின் சீடர்களைக் காட்டினும், பெருமையும், தூய்மையுமானவராவர். எல்லா உலகத் தத்துவவாதிகளைவிட-எல்லாக் கொள்கை உற்பத்தியாளர்களையும்விட—எல்லா மதத்தையும் ஆரம்பித்தவர்களைவிட—பொறுமை மிக்கு, சுயநலமற்று வீரமிக்குத் தோன்றிய மனிதர் புரூனோ ஒருவரே.

ஆயினும் ஒப்புவமையற்ற இந்த சிறந்த மனிதனை கிருஸ்தவர்கள்—கிருஸ்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்போர் கொன்றார்கள். இந்தக் கிருஸ்தவர்கள் அவர்கள் கொள்கைக்கு உண்மையானவர்களாம். அவர்கள், பக்தி புனித மகிழ்ச்சியால் பரிசு கொடுக்கப்படும்; அய்யம் அழியா இன்னலால் தண்டிக்கப்படும்; என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் நேர்மையாளர்களாம். அவர்கள் பக்தர்கள்; இரக்கமற்றவர்கள்; தெய்வீகமும், பேய்மையும்; மென்மையும், குரூரமும்; மதவைராக்கியமும், பகை வைராக்கியமும்; கிருஸ்துவைப்போன்றும், கொடூரமும்; வாயளவு நேசித்தும் உள்ளத்தளவு வெறுக்கும் செய்கைகளையுடையவர்களாவர். ஆயினும் அவர்கள் மூட நம்பிக்கையினுடைய—பக்தியினுடைய நேர்மையான குற்றவாளிகளாகும்.

உலகாயுதம் யாதுசெய்துள்ளது?

1608-ல் 'லிப்பர்செயிம்' என்ற உலாந்து நாட்டவர், பொருட்கள் தெட்டெனத் தெரியும்படியான கண்ணாடிகளை அமைத்துத்

சபையும் Fail (தோல்வி) அடைந்து விட்டதால், பார்ப்பனர்கள் இப்போது இந்துமகாசபையை பிரச்சாரத்துக்கும் ராஷ்ட்ரீய சுயசேவக் R. S. S. A. யை (ரகசிய பலாத்கார) செயலுக்குமாக வைத்துப் பயன் படுத்தி வருகிறார்கள்.

ஏன்?

உலகமெல்லாம் இலக்கங்கள் அதாவது 1, 2, 3 முதலிய இலக்கங்கள் ஒரேமாதிரியாகவும், கிழமைகள் வாரத்துக்கு 7-வீதமும், நாள்கள் மாதத்துக்கு 30-வீதமும், ஆண்டுக்கு 365 வீதமும், மாதங்கள் ஆண்டுக்கு 12 வீதமும், கிழமைப்பெயர்கள் ஒரே மாதிரியாகவும், இருந்துவரக் காரணமென்ன?

கொடுத்தார்.

அவர் தொலை நோக்கியைக் கண்டுபிடித்தார்.

அவர் நமக்கு எண்ணற்ற உலகங்களை நம் கண்முன் கொடுத்து, நம்மைப் பிரபஞ்ச வாழ்வாளராக்கினார்.

1610-ம் ஆண்டு ஜனவரி 7-ந் தேதி இரவு கலிலியோ, காபர்நிகசின் உண்மைத் தத்துவத்தை நிலைநாட்டி, 1632-ல் தன்வேலைப் பாடான 'உலகத்தின் அமைப்பு' என்ற புத்தகத்தை வெளிப்படுத்தினார்.

ஆலயங்கள் அப்போது யாது செய்தது?

கலிலியோவைச் சிறைசெய்து, முழங்காலிலே இருக்கச்செய்து, விவிலிய நூலின்மேல் கைவைத்து ஆணையிடச்செய்து, தன் கருத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள—மாற்றிக்கொள்ளச் செய்தது. 10 ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத்து—பத்து ஆண்டுகளுக்குப் பின் அவர் மரணத்தினால் இரக்கம் காட்டி விடுதலை செய்தது. அதன்பின் ஆலயம், புனித ஆவியால் நிரம்பப்பெற்ற மனிதர்கள், அவர் உடலை மயானத்தில் புதைக்க அனுமதிக்கவில்லை. அவர் உடலையுண்ணும் தூசியானது ஒருவேளை, அவரை நீக்கி வைத்த மக்களின் உடலைக் கொளுத்திவிடும் என்று பயந்தார்கள்.

1609-ல் கெப்ளர் என்ற அறிஞர் 'கிரகக் கூட்டங்களின் அசைவு' என்ற தன் புத்தகத்தை வெளியிட்டார். அவர் கூட உலக இழுப்புச்சக்தியையும், அது சூரிய, சந்திர, கிரகக் கூட்டங்களுக்கும், இடைவெளிக்கும் தகுந்ததுபோல் நடப்பதையும் உணர்ந்திருந்தார். கெப்ளர் தன் மூன்று தத்துவங்களைக் கூறினார். அவர் கணித முறையிலே, இடைவெளி, கிரகம், அசைவு, இவைகளின் தொடர்பு முதலியவைகளை அறிந்து விளக்கம் கூறினார். இவ்வளவு சிறந்த அறிவை இதுகாறும் மனித மூளை பெற்றதில்லை.

வானாராய்ச்சி விஞ்ஞானமாகவும், கிறிஸ்து மதம் தெய்வீகமாகவும் மாறியது.

இதன்பின் நியுடன், எர்ஸ்கேல், இலப்லஸ் முதலியோர் தோன்றினார்கள். ஜாசுவா, எலிஜா மத விசேடங்களின் வான சோதிடம், அறிஞர் முறைகளில் மங்கியது; சுகோவா அவர்கள்முன் ஒரு மூடக் காட்டுமிராண்டிக் கடவுளாக மாறியது.

இயற்கையின் செய்கை மனித வாழ்க்கையில் குறுக்கிடுவதற்காக நிகழ்வதில்லை; கிரகணங்கள் கடவுளின் தண்டனையாக வரவில்லை, வால் நட்சத்திரங்கள் சாம்ராஜ்யங்களை அழிக்கவோ, அரசர்களின் உயிரைக் கொல்லவோ வரவில்லை; நட்சத்திரங்களின் சுழற்சி மனிதனின் செய்கைக்குப் பலனாக நடப்பதில்லை என்னும் பல உண்மைகளை மக்கள் உணர்ந்துகொண்டனர். புனித கிழக்கிலே அறிவுக் கலை மலர்ந்துவிட்டது!

(தொடரும்)

அதிகாரிகள் தொல்லை கொடுத்தும்
ஆயிரமாயிரமாகக் கூடினர்!

உணர்ச்சி மிக்க கரூர் தாலூகா 6-வது மாநாடு.

கரூர், 2-5-49.

நேற்று காலை கரூர் தாலூகா 6-வது திராவிடர் கழக மாநாடு ஆட்சியாளரின் அடக்குமுறைக்கிடையிலேயும் மிக வெற்றிகரமாக தோழர் எஸ். குருசாமி தலைமையில் ஆரம்பமாயிற்று. நகர் எல்லைக்குள் ஊர்வலமும் மாநாட்டுப் பந்தலில் நடிகவேள் எம். ஆர். ராதா நாடகமும், இசைக் கச்சேரியும் நடத்தக்கூடாதென தடை உத்தரவு விதிக்கப்பட்டிருந்தது. தடை விதிக்கப்பட்ட செய்தி கேட்டுப் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளாக மாகாண மாநாடு போல் வந்திருந்தனர். என்றுமில்லாத பலத்த போலீஸ் ரிசர்வ் உட்பட துப்பாக்கி சகிதம் பல வாரிகளில் ரோந்து வந்து கொண்டிருந்தனர். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்தனர் கருஞ்சட்டையினர். மாநாட்டில் சுமார் 10,000 பேருக்குமேல் கூடியிருந்தனர். மக்களை மாநாட்டுக்குச் செல்லவிடாமல் செய்ய, ஒழுங்காக நடத்தவிடாமல் தடுக்க, சில அதிகாரிகள்கூட முயன்றதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும் காலையில் ஆரம்பித்த மாநாடு இரவு 7 மணி வரை சிறப்பாக நடந்தது. தோழர் என். ஜீவரத்தினம் திராவிடர் கழகக் கொடியை உயர்த்தி அதனை எதிர் கட்சியினரும் காப்பாற்ற வேண்டுமென்றும், காரணம் அக்கொடி எதிரிகளுடையவும் சூத்திரத்தன்மையை நீக்க ஏற்றப்படுவது எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து மத்திய திராவிடர் கழகத் தலைவர் வேதாசலம் மாநாட்டுத் திறப்புரையாற்றினார். சமீப காலமாக மந்திரிகள் பக்தவத்சலம், மாதவமேனன், சந்திரமௌலி, பரமேஸ்வரன் ஆகியோரும் காமராஜரும் நிலை குழம்பி திராவிடர் கழகத்தைத் தாக்கி வருகின்றனர் எனக்குறிப்பிட்டார்.

தோழர் மல்லையா வரவேற்புரையாற்றி குருசாமியைத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்டார். பெரியார், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ராதா முதலியோர் தலைவர் பிரேரணையை ஆமோதித்தனர்.

தலைவர் திராவிடர் கழக லட்சியங்களையும் கொள்கைகளையும் விளக்கி சுமார் 1 மணி நேரம் தலைமையுரையாற்றினார்.

பின்னர் பெரியாரவர்கள் நாட்டுப்படத்தைத் திறந்து வைக்கு முகத்தான் நாம் நாட்டுப்பிரிவினை கோருவது எதற்கென விளக்கி அதனை ஆரியரும், காங்காசாரும் ஏன் எதிர்க்கிறார்கள் என 2-30 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

அத்துடன் இடைவேளைக்குக் கலைந்த மாநாடு மாலை 5 மணிக்குக் கூடிற்று.

தோழர் அழகிரியின் மறைவுக்கு வருத்தம் தெரிவித்தும், அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்தும், இந்தப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென

றும், சென்னை நகரத்தைத் தனி மாகாணமாக்கும் முயற்சியைக்கண்டித்தும், சென்னை சட்டசபையில் நிறைவேறியுள்ள பலதார மணத்தடை சட்டத்தையும், திருமண ரத்து உரிமைச் சட்டத்தையும் வரவேற்றும், பெண்களுக்குச் சொத்துரிமை தரக்கூடிய மத்திய சட்டசபை மசோதாவை விரைந்து சட்டமாக்கக் கேட்டுக்கொண்டும், சர்க்கார் மட ஒழிப்பு மசோதாவை விரைவில் சட்டமாக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கடைசியாகத் தீர்மானத்தைப் பெரியாரவர்கள் ஆதரித்துப் பேசினார்கள். அத்துடன் மாநாடு மாலை 6 மணிக்கு முடிவுற்றது.

பின்னர் அதனைத் தொடர்ந்து மாநாட்டுப் பந்தலிலேயே இரவு 7 மணி வரை பொதுக்கூட்டமும் நடந்தது. நடிகவேள் எம். ஆர். ராதாவும் மற்றும் பலரும் பேசினர்.

தோழர் ராதா தம் நாடகங்களுக்கு அதிகாரிகள் தொல்லை அதிகமாகக் கொடுத்து வந்தால் புராண நாடகங்களை அவற்றின் உண்மை சொரூபத்தைக் காட்டும்படி தாம் நடிக்க நேருமெனக் கூறினார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வேந்தன் மேய தீம்புனல்
உலகம்,
வருணன் மேய பெருமணல்
உலகம்''
(அகத்திணையியல்-5)

என அவர்களை அவ்வந்நிலத்தின் தெய்வங்களாக்கிக் கூறினர். 'மாயோன்மேய' என்பது, மாயோனால் விரும்பிய எனப்படும். இந்நால்வரும் அந்நிலங்களையும், அந்நிலமக்களையும் பெரிதும் விரும்பிச் சீர்செய்து வந்தவர் என்பது தெளிவாகிறது. நிலத்தையாண்டது பற்றியே நிலத்தோடுகூறினார்.

பண்டைக் காலந்தொட்டுக் கடைச்சங்க காலம்வரை நானிலத் தலைவர் வணக்கம் இருந்து வந்தது. பின்னர் வேந்தர்களிருந்த கிழக்கு நாடு கடல் கொண்டொழியவே வேந்தர் வணக்கமும், சேர சோழ பாண்டியராட்சி வெவ்வேறாக ஏற்பட்டபின் தனித்தனியாக வாணிகம் செய்து வந்ததால் வருணன் வணக்கமும் சுருங்கி, குறிஞ்சித் தெய்வவணக்கமும் முல்லைத் தெய்வ வணக்கமும் பெருகின. பின்னர் அவை, சைவம், வைணவம் என்னும் பெயர்களால் ஆரியக் கூட்டுறவோடு நிலைபெற்றபின்—அவ்விரு சமயங்களும் ஆரியமயமானபின், மாயோன்-பிரமன் தந்தையாகவும், சேயோன்-அப்பன் மகனாகவும் (சிவன், முருகன்) மாற்றப்பட்டு ஆரியர் பெயர்களும், மனைவி மக்களும், கைலை, வைகுண்டம் முதலிய இடங்களும், பல ஆரிய செயல்கள் நிறைந்த பொய்க் கதைகளும் உண்டாக்கப்பட்டன.

ஆரியர்கள் பிற்காலத் தமிழர்களை ஏய்ப்பதற்காக மிகவும் முற்பட்ட தமிழர் தலைவர்களைத் தங்கள் தெய்வங்களாகவும், தங்காலத்தவரை, தமது கொள்கையை ஒப்புக்கொள்ளாதவரை, தமக்குப் பணிந்து நடக்காதவரை அரக்கர்களாகவும், அசுரர்களாகவும் ஆக்கிக் கொள்வது வழக்கம். அவ்வாறே நானிலத் தலைவர்களைத் தங்கள் தெய்வங்களாகவும், தங்காலத்திருந்து எதிர்த்த இறைவன் (இராவணன்) மாவலி, பொன்னன் (இரணியன்) முதலிய தமிழர் தலைவர்களை அரக்கர்களாகவும் கதை கட்டித் தமிழர்களை நம்பும்படி செய்து, தங்கள் சூழ்ச்சிகளை மறைத்துப் பெருமையடைந்தனர். தமக்குப் பணிந்து, உதவியவர்களைத் தெய்வமாக்குதலும் உண்டு. அனுமன், வீடணன் முதலியோர் தெய்வங்களாக்கப்பட்டுத் தமிழர்களால் வணங்கப்பட்டு வருகின்றனரல்லவா? [அனுமனும் வீடணனும் அக்கால நிகழ்ச்சி. இந்தக் காலத்தில், வர்ணாச்சிரமத்தை வற்புறுத்திய காந்தியாரை மகாத்மாவாக்கியதும், பின்பு தேவையில்லாத நேரமென்று அவரைக் கொன்று ஒழித்ததுமே இதை நன்றாக மெய்ப்பிக்குமல்லவா? ஆ—ர்]

முல்லை நிலமக்கள் தங்கள் முன்னோனான மாயோன் சிறப்பை எடுத்துக்கூறி, அவனை வாழ்த்தி வழிபடுமுகத்தான், தங்காலத் தலைவற்கு அவன் முன்னோன் குணஞ் செயல்களை எடுத்துக்கூறி வற்புறுத்துதலோடு, இவனையும் அவ்வாறு நடக்கும்படி ஊக்குவித்தலுமாகும். இவ்வாறே மற்றநிலத் தெய்வவழிபாடும். எனவே, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னும் நால்வரும் தமிழர் தலைவர்களேயாவர். தெய்வம் என்பது உயர்வு குறிக்கும் சொல்லேயாகும்.

4. உரிப்போருள்.

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தும் முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நிலங்களின் உரிப்பொருள்களாகும். உரிப்பொருள்—அகவொழுக்கத்திற்கு உரியபொருள். புணர்ச்சி இருவருக்கும் ஒப்பநிகழ்தலான் புணர்ச்சியை முதலினும், புணர்ந்தபின் அல்லது பிரிவின்மையால் பிரிவை அதன் பின்னும், தலைவன் பிரிந்தபின் தலைவி ஆற்றியிருத்தல் (பொறுத்துக் கொண்டிருத்தல்) முல்லையாதலின் இருத்தலை அதன் பின்னும், அங்ஙனம் ஆற்றியிராது இரங்கலை அதன் பின்னும், இரங்கியதலைவி, தலைவன் வந்ததும், ஊடுவாளாதலின் ஊடலை அதன் பின்னும் வைத்தனர்.

5. நிலமும், போழுதும், ஒழுக்கமும்.

நமது முன்னோர்கள் இன்ன நிலத்தில், இன்ன கால நேரத்தில், இன்ன ஒழுக்கம் நடைபெறும் என்று கூறியிருக்கும் மதிநுட்பம் ஈடுமெடுப்புமில்லாத தொன்றாகும்.

மே தின விழா.

தூத்துக்குடி 3-5-49.

1-5-49-ல் இந்நகரிலுள்ள 18 தொழிற் சங்கங்களும் சேர்ந்து மே தின விழாவைக் கொண்டாடின. காலையில் சைக்கில் ஊர்வலம் நடந்தது. மாலை தொழிலாளிகள் பல வேஷங்கள் தாங்கி ஊர்வலம் வந்தனர். அதன்பிறகு தொழிற் கருவிகள் கொண்ட வண்டி ஊர்வலம் வேறு நடந்தது. 10000 தோழர்கள் திருவை மைதானத்தில் மாலை 6½-மணிக்குக் கூடிவிடவே தோழர் சாமி எல்லோரையும் வரவேற்க தோழர் சோனைமுத்து தலைமையில் மிகச் சிறப்பாகக் கூட்டம் நடந்தது. தோழர்களான ராமசாமி, சேவியர், சீனிவாசன், மெய்யப்பன், தங்கப்பழம், லிங்கம், மரியதாஸ், செல்லையா முதலியோர் பேசினர். தோழர் ரத்தினம் அவர்களால்கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது.

ரோஜா முத்தையா

(4ம் பக்கத்தொடர்ச்சி)

மேஜை, நாற்காலி, பெஞ்சு முதலிய பல பெயர்களுக்கு உருவம், தோற்றம் ஆகியவைகளே காரணமாய் இருப்பது போல், அணுக் கிருமி, பூச்சி, புழு, பட்சி, மிருகம், குரங்கு, மனிதன் முதலாகிய பல ஜந்துக்களுக்கும் உருவம், தோற்றம், குணம் முதலிய காரணமாய்ப் பல பெயர்கள் சொல்லப்பட்டாலும், தொட்டுக் காட்டும் பாகங்களானது எல்லா ஜீவவர்க்கத்திற்கும் ஒரே மாதிரியான-ஒரே பெயர் கொண்டதான மூலப் பொருளாகத்தான் இருக்கும். ஆகவே ஜீவவர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப்பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவை தவிர, அவற்றின் மூலப் பொருள்களும் தத்துவமும் ஒன்றேயாகும்.

என்வே, எத்தனையோ கோடி வித ஜீவப்பிராணிகள் என்பதில், மனிதன் என்பதும் ஒருவிதமான தோற்றமுடைய உருவத்திற்குச் சொல்லப்படும் பெயரேயொழிய, மனிதன் என்கிற ஒரு தத்துவத் தனிப்பொருள் இல்லை என்பதை இதனால் ஒருவாறு உணரலாம். ஏனெனில் மனிதன் என்று குறிப்பிடுவதற்குத், தொட்டுக் காட்டக் கூடிய ஒரு வஸ்து, மனித சரீரத்தின் எந்தப் பாகத்திலும் கிடையாது என்பதாலேயேயாகும். உதாரணமாக ஒரு மனித உருவத்தைக் காட்டி, அவனை மற்ற ஒரு மனிதனைத் தொட்டுக் காட்டச் சொன்னால், அவன் ஒரு மனிதன் என்பவனின் சரீரம் என்பதில், ஏதாவது ஒரு அவயவத்தைத் தான் தொட்டுக்காட்டுவான். அந்த அவயவத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால், வயிறு, மார்பு, முதுகு, தோள் என்பன போன்ற ஏதாவது ஒரு பெயரையுடைய அவயவமாகத்தான் இருக்க முடியும். அந்தப் பெயருக்குடைய அவயவ வஸ்துவையும் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தால், அது தசை தோல் முதலாகிய பெயர்களுடைய பொருளாகத்தான் காணப்படும். இப்படிஎல்லாம் இருந்தாலும்கூட, அப்படிக் காட்டப்பட்ட மனிதனும் இயங்குதல்-அதாவது அசைகின்ற சக்தி இருக்கும்போதுதான் அந்தத் தோற்றத்திற்கு மனிதன் என்கிற பெயரை உடையதாகவும், அதாவது அசைகின்ற சக்தி இல்லாது போய்விட்டால் மனிதன் என்ற பெயரையுடைய அதே தோற்றம் பிணம் என்னும் பெயரையுடையதாக ஆகிவிடுகின்றது.

அன்றியும், மனிதன் அசையும் சக்தியை உடைத்தாயிருக்கும் வரை, அந்தச் சரீரத்தில் எந்தப் பாகம்—அதாவது முன் சொல்லப்பட்ட அவயவங்களாகிய கண், காது, வாய், கால், கை முதலாகிய எப்பாகம் போய்விட்ட போதிலும் மனிதன் என்றே சொல்லப்படுகின்றது. ஆகையால் அசையும் சக்தி உள்ள ஒருவிதத் தோற்ற உருவத்திற்குத்தான் இங்கு மனிதன் என்று சொல்லப்படுவதாய் இருந்துவருவதை நாம் பார்க்கின்றோம். இந்தப்படியான மனிதன் அசையும் சக்தியை உடைத்தாய் இருக்கும்வரைதான் அவனுக்குள் உயிரோ—ஜீவனோ—ஆத்மாவோ ஒன்று இருக்கின்றது என்று கருதுகின்றார்களே ஒழிய வேறில்லை.

இந்த அசையும் சக்தி இருக்கின்ற ஜீவர்கள் எல்லாவற்றிற்குமேதான், ஆத்மா என்பதாக ஒன்று இருக்கின்றது என்பது ஆத்மவாதிகளின் கொள்கையாகும். அதாவது "சரீரத்தில் இருந்து ஆத்மா பிரிந்துவிட்டால் அசைவு நின்றுவிடும்" அதாவது மனிதன் செத்துப் போவான் என்று சொல்லுவார்கள். எப்படி இருந்தாலும் "சரீரத்திற்கு அசையும் சக்தியைக் கொடுப்பதுதான் ஆத்மா" என்பது ஆத்மவாதிகளின் கொள்கையென்பதும் இதனால் புலப்படும்.

ஆகவே இந்த அசையும் சக்தி சரீரத்திற்கு எப்படி உண்டாகின்றது? இது எப்படி நின்றுபோகின்றது? என்பதைச் சரிவர உணர்ந்தோமானால், ஆத்மாவின் தன்மை இன்னதென்று ஒருவாறு விளங்கிவிடும்.

இதற்கு முன், நமக்கு ஆத்மாவைப்பற்றிச் சில கேள்விகள் எழுகின்றன.

அதாவது, சரீரத்திற்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? சரீரத்தை விட்டு விட்டு ஆத்மா எப்படி வெளியேறுகின்றது? அது ஏன் வெளியேறிவிடுகின்றது? எந்த மாதிரி ஆத்மா மனித சரீரத்திற்குள் வருகின்றது? எந்தமாதிரி ஆத்மா கழுதை முதலிய மிருக சரீரத்திற்குள் வருகின்றது? எந்தமாதிரி ஆத்மா அணுக் கிருமி முதலிய சரீரத்திற்குள் நுழைகின்றது? ஜீவர்களின் அசைவு, பலம், குணம் முதலிய பலவித மாறுதலான நடவடிக்கைகளுக்கு ஆத்மா காரணமா—அல்லது அதன் சரீர அமைப்புக் காரணமா? என்பன போன்ற பல கேள்விகளாகும். (இவை பழைய கேள்விகளாகப் பலருக்குக் காணப்படலாம் என்றாலும், பழைய கேள்விகள் புதிய மனிதர்களுக்குத் தோன்றக்கூடாமல் செய்வதற்குப், பழைய காலத்தில் இருந்தே யாரிடத்திலும் சக்தியில்லாமல் போய்விட்டதால், அது புதிய மனிதர்களுக்கும் தோன்றுவதற்கு யார் என்ன செய்யமுடியும்.) இவை ஒருபுறம் நிற்க, இனி எடுத்துக் கொண்ட விஷயமாகிய "நான்" என்பதைப்பற்றிக் கவனிப்போம்.

ஒரு மனிதன், தான், "நான்" என்று சொல்லுவது அந்த மனிதனுக்குள் இருக்கும் அசையும் சக்தியாகிய ஆத்மா என்பதா? அல்லது வேறு பொருளா? என்று பார்ப்பதனால், அது வேறு பொருளா அல்லவா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே, ஆத்மா என்பது நான் என்று சொல்லுவதல்ல என்பதானது, சீக்கிரத்தில் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கின்றது. எப்படியெனில் ஒரு மனிதன் பேசும்போது, "என் ஆத்மா என்றும், "நான் என் ஆத்மாவை விடமாட்டேன்" என்றும், —இந்தமாதிரி நான், என், என்பது வேறு என்றும், ஆத்மா என்பது வேறு என்றும், பிரித்துப் பேசுவதையும், பேசும்படி இருப்பதையும் பார்க்கின்றோம். ஆகவே சரீரத்தின் அசையும் சக்தி ஆத்மா என்றால், இந்த "நான்" என்பது அதைவிட்டுவேறுபட்ட மற்றொரு விஷயமாக இருக்கும் என்று கருத வேண்டியதாக இருக்கின்றது என்பது இதனால் ஒருவாறுபுலப்படும்.

ஆனால் ஒரு மனித சரீரத்தில் ஆத்மா என்பதாக ஒரு வஸ்துவும், உயிர் என்பதாக ஒரு வஸ்துவும், நான் என்பதான தன்மையை உணர்த்த ஒரு வஸ்துவும் ஆக மூன்று வஸ்துக்கள் இருக்கும் என்று நினைப்பது சரியான நினைப்பாகாது என்பதோடு, அப்படி நினைத்தாலும் அவைகளில் எது மனிதனை நடத்துகின்றது—அல்லது மனிதனுடைய நடத்தைக்கு ஜவாப்தாரித்தனமுடை-

புளுகு மூட்டை.

லெட்சுமி!

★

"வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம்; வீட்டுக்கு லெட்சுமி வரும் வேளையில் இப்படியா படுத்துத் தூங்குவது? எழுந்திருங்கள்!" என்றாள் என் துணைவி. "அடசே! மூதேவி! தூங்கும்போது தொந்தரவு செய்யாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்! என் அலுப்பு உனக்கெப்படித் தெரியும்? எழுப்ப வந்துவிட்டாய் பெரிய சீதேவி மாதிரி!" என்று பதிலுக்குச் சீறி விழுந்தேன். அவள் ஒன்றும் பேசவில்லை, அச்சத்தால். ஆனால் தனவாய்க்குள் என்னவோ முணுமுணுத்துக்கொண்டே எதிரே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த லெட்சுமி படத்திற்குப் பூமாலையை மாட்டிவிட்டுச் சமையலறையில் நுழைந்தாள்.

லெட்சுமிபடம்! விசித்திரமாகத்தான் இருக்கிறது! ஒரு சாதாரணச் செந்தாமரைப் பூவின்மேல் ஒரு பெண் நிற்கிறாள்; அவளுக்குக் கைகளோ நான்கு! ஒரு கையிலிருந்து பொன், மழை போலக் கீழே பொழிகிறது. இந்த லெட்சுமிதான செல்வத்துக்கு அதிதேவதையாம். ஆனால் என்னைப் போன்றவர்களை இவள் ஏறெடுத்தும் பார்த்ததாகத் தெரியவில்லையே! எங்குதான் இருக்கிறாள் இவள்?......

அடடே! யாரிவள்? என்ன அதிசயம்! அழகே உருவான ஒரு பெண். ஆனாலும் பத்திரிகைகளில் அடிக்கடி செய்தி வருகிறதே—வினோதப் பிறவி என்று—அதைப்போல் இரண்டு கால், நாலு கைகள், முகம் அன்றலர்ந்து விரிந்த செந்தாமரை மலர்போல் எழிலும் ஒளியும் விளங்கக் காணப்படுகிறது. மிகுந்த சிரமத்துடன் வரவழைக்கப்பட்ட புன்னகை உதடுகளில் ஒளிருகின்றது. அழகிய முகத்திலும் இலேசாக சோகத்தின் சாயை படர்ந்திருக்கிறது. இவள்தான் 'அந்த' லெட்சுமியோ? எதற்கும் விசாரித்தால் உண்மை புலனாகிறது.

"தேவி! நீதான் லெட்சுமி என்று கருதுகிறேன்."

"ஆமாம், நானே தான்"

"ஏனம்மா நீ இவ்வளவு வெறுப்பும், விசனமும் தொனிக்கும் குரலில் பேசுகிறாய்? உன் கிருபாகடாட்சம் கிடைக்காதா என்று ஏங்கிக் கிடக்கின்றனர் என் நாட்டு மக்கள். நீயோ விரக்தியுடன் தோன்றுகிறாய்? என்னம்மா சங்கதி?"

"தம்பி உன்னிடம் மறைப்பானேன். என் மனத்தைக் கறையான்போல் அரிக்கும் அந்த உண்மைகளை, உன் போன்றாரிடம் சுக்கினாலொழிய புழுங்கும் இந்த நெஞ்சுக்கு நிம்மதி கிடைக்காது. சொல்லிவிடுகிறேன் கேட்கிறாயா?"

"ஆகா! காத்திருக்கிறேன் சீதேவி"

"செல்வத்துக்குத் தெய்வம் நான் தான் என்றும், என்னருளால்தான் மக்கள் வாழ்வு வளம்பெற்றுச் சுபீட்சமாய் இருக்கமுடியுமென்றும் கற்பித்தனர். ஆனால் இந்தத் தொல்லை மிக்க வேலையை, என் தலையில் போட்டுக்கொண்டு நான் படும்பாடு......அடடா நாணயமாய் நடக்கவேமுடியவில்லை"

"சுயராஜ்ய சர்க்காரின் நிதி மந்திரி போல், ஏழையரை இன்னும் கீழே தள்ளிப், பணக்காரரை மேலும் பகற்கொள்ளையராகும்படி செய்ய நேரிடுகிறதோ?"

"ஆமாம். அல்லும் பகலும் என்னையே நினைந்து உருகிக் கருகும் எண்ணற்ற ஏழையரைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் சூது, சூழ்ச்சி, சுரண்டல், சதிசெய்யும் சண்டாளரையே காத்து உயர்த்தவேண்டியிருக்கிறது. எனக்குத் துளியும் பிடிக்கவில்லை இந்தப் போக்கு! ஒட்டிக்கு இரட்டியாக வட்டிக்குப் பணம் கொடுப்போரின் பெட்டியைத்தான் நான் நிரப்ப வேண்டி ஏற்பட்டது. அவர்களது பூசையையும் ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது. இதெல்லாம் பிடிக்காமல் இந்த இலாக்காவையே தொலைத்துத் தலைமுழுகலாமென்றால், அவர் கேட்டால்தானே! தன்னையும் என்னையும் படைத்துக் காத்துவரும் பிறவி முதலாளிகளான பிராமணர்களையும், அவர்களது பொற்பாத கமலங்களைத் தங்கள், சிரமீது வைத்துக் கரங்குவித்துக் கால் கழுவி, நீரைப் பருகிவரும் பணக்காரர்களையும் எப்படி நாம் விட்டுக்கொடுக்க முடியும் என்கிறார். நான் என்னதான் செய்ய முடியும்? இந்த மானங்கெட்ட புருஷனை மணந்துகொண்டதே நான் செய்த மாபெருந் தவறு........"

"ஏனம்மா அப்படிச் சொல்லிவிட்டாய்? உனது துணைவரோ மும்மூர்த்திகளிலொருவர். இந்த உலகையே காப்பவர் அவர்தானாமே?"

"நீயொரு பைத்தியம்! இந்த ஒழுக்கங்கெட்டவரை வழிபடுவதால்தானே இன்னும் உங்கள் நாட்டில் நல்லொழுக்கம் தலையெடுக்கவில்லை! இவர் யார் யாரைக் காப்பாற்றுவார் என்பது உனக்குத் தெரியாதா? ஆதிமுதல் இவர் கதையைக் கேட்டுத்தான் பாரேன்! ஒரு பாபமும் அறியாத மகாபலி, இரணியன், இராவணன், வாலி, கம்சன் முதலிய பலரைக் கொல்லவில்லையா? காரணம் யாவரும் பூதேவரின் விரோதிகள் என்பதுதானே? இதே முறையில் தான் நயவஞ்சகமாக இவர் என்னையும் மணந்துகொண்டார்?"

"அஃதெப்படி?"

"முன்பு ஒருசமயம் அமிர்தம் எடுப்பதற்காக மந்தாரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை நாணாகவும் கொண்டு தேவர்கள் வால்புறமும், அசுரர்கள் தலைப்புறமும்—ஏனென்றால் நஞ்சு அந்தப் பக்கந்தானே இருக்கிறது!—பிடித்துப் பால் கடலைக் கடைந்தார்களாம்! அதில் உண்டான ஆலகால விஷத்தை சிவனுக்களித்துவிட்டு என்னை இவர் கவர்ந்துகொண்டார். இதில் ஏமாற்றமடைந்ததால்தான் சிவனைச் சமாதானப்படுத்த அடிக்கடி மோகினி ரூபமெடுத்து அந்தப் பித்தனுக்குக் காமவெறி தணிக்கும் கருவியாக உதவினார், இந்த ஆண்மையியு

யது என்னும் விஷயம், மயக்கத்தையும், முரண்களையும் விளைவிக்கக்கூடியதாக ஆகிவிடும். ஆதலால் "நான்" என்று சொல்லப்படுவதும் எண்ணப்படுவதும் தனிப்பட்ட ஒரு வஸ்துவல்ல என்றுதான் எண்ணவேண்டியிருக்கின்றது.

பின், அது என்னவிதமாகத்தான் இருக்கக்கூடும் என்ற கேள்விக்கு, நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றோம்.

அது பிசகாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்தப் பிசகானது ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று பிரித்துச் சொல்லுகின்றது போன்ற அவ்வளவு பெரிய பிசகாகவும், ஆத்மாவுக்குக் குணங்கள் கற்பிக்கின்ற அளவு பிசகாகவும் இருக்காது என்பது மாத்திரம் உறுதி. திருத்துவதற்கு யாவருக்கும் உரிமை கொடுத்தே நமதபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றோமேயொழிய; இதுவே சரியான அபிப்பிராயம் என்பதாக நாம் ஒன்றும் இவ்விஷயத்தில் சொல்லவரவில்லை.

ஆகவே, மனித சரீரத்துள்ளே ஆத்மா என்பதாகத் தனித்துப் பிரித்து உணர்த்தக்கூடிய வஸ்து ஒன்றும் இல்லை என்பது நிச்சயமாகும்.

யில்லாத பேடி! அதே அச்சத்தினால் தான் என்னைத் தனியே விடாமல் மார்போடணைத்துக்கொண்டே கிடந்தார் சதா சர்வகாலமும்—வேறு என்ன முடியும் இந்த நபுஞ்சகனால்?

"ஆனாலும் சிவபெருமானைப் போல் இவர் ஆபாசமாகவும், முறை தவறியும் நடந்துகொள்ளவில்லையே?"

"உனக்குத் தெரிந்தது அவ்வளவு தான்! அவரை எத்தனையோ பங்கு நல்லவராக்கிவிட்டாரே இவரது கொடிய செய்கைகளால். திடீரென்று புறப்பட்டு எங்கோ ஓடுவார். என்ன சமாச்சாரம் என்று கேட்டால் இவரது நியாயமே அலாதியாயிருக்கும். தண்ணீர் குடிக்கப்போன ஒரு யானையை முதலையொன்று பற்றிக்கொள்ளவே யானை அலறுவது சகியாமல் முதலையைக் கொன்று, களிற்றைக் காத்தாராம்! என்ன கருணை? இவரேதான் எத்தனையோ தகாத வழிகளில் சூழ்ச்சிகள் செய்து, பல்லாயிரக்கணக்கான நிரபராதிகளைக் கொன்று குவித்துக் குதூகலித்தார். தன்னினத்துக்கு ஒரு உரோமங்கூடச் சேதமாகாமல் ஒரே இனத்தாருக்குள் கலகமூட்டி மோதி மாளச்செய்தார், துரோகி!

"அதுசரிதான். இது அன்றுமட்டுமல்ல, இன்றுகூட நடப்பதுதான்; இந்து-மித்திரன் கும்பலினால் உசுப்பி விடப்பட்டு எத்தனையோ விபீஷணர்களும், அனுமார்களும் இன்று எங்கள் மேல் பாய்கிறார்களே!"

"இன்னும் கேள் இவரது விபரீத நடவடிக்கைகளை! அய்ந்து கணவன்மாருக்குப் பெண்டாட்டியாயிருந்த ஒருத்தி, அய்வரும் போதாமல் அங்கமாக ஆறாவது கணவனாக ஒருவனைக் காதலித்தாள். இவள் கற்புப் பறிபோகிறதென்று இவருக்குக் கருணை வெள்ளம் கரைபுரண்டோடிற்றாம். கட்டிய கணவன்மாரோ கலங்காது பார்த்துக்கொண்டிருக்கின்றனர்; இவர் ஓடோடிச் சென்று அவள் மானத்தைக்காக்கச் சேலைகளை இடைவிடாது அளித்தாராம். ஆனால் இந்தத் தயாளமூர்த்திதான் முன்பு குளிக்கும் பெண்களின் சேலைகளைத் திருடி, அவர்களை நிர்வாணமாய்க் கரைக்கு வரச்செய்து பார்த்து ரசித்தவர். அருளுடைய யென்னும் உத்தமியை நிர்வாணப் பிச்சை கேட்டவர்; மற்றும் பல்லாயிரக்கணக்கான கோபியையரின் மானத்தைப்பறித்தவர்; மனையாளைக் கணவருடன் வாழ்ந்து வந்த வனிதையரைப் பிரித்துத் தன்னைப் பின்தொடரச் செய்தவர்—ராதை, மீரா, சக்கு... இவர்களின் கதை தெரியாதா? மணமாகாத கன்னிப் பெண்களையும்—ஆண்டாள் போல-தவர்ந்து சென்றவர்; இன்னும் எல்லாவற்றுக்கும்மேலாக ஒரு பழியும் செய்தார்...!

மலத்தில் அரிசியா?

கம்ப ராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இருந்து என்ன பயன்? ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும், மலத்தில் இருந்து அரிசிபொறுக்குவானா? அது போல்தானே கம்பராமாயண இலக்கியமும் இருக்கிறது. அதில் தமிழ் மக்களை எவ்வளவு இழிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழரின் சரித்திரகால எதிரிகளை எவ்வளவு மேன்மையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படி கம்பராமாயண இலக்கியத்தைப்படிப்பான். இன்று கம்ப ராமாயணத்தால் தமிழ் மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா என்று நடுநிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

—பெரியார்.

ஜலந்தரன் மனைவி பிருந்தையின் மேல் மோகங்கொண்டு, அவள் கணவன் வெளியே சென்றிருந்த சமயம், அவனைப் போல் வேடமணிந்து அந்த உத்தமியைப் போய்க் கற்பழித்து விட்டார். உண்மையறிந்த அவள் உடனே உயிர் துறந்தாள். பின்னும் அவள் மீது கொண்ட மோகந்தணியாது அவளைக் கொளுத்திய இடுகாட்டில் சாம்பலின் மீது கிடந்து புரண்டாராம்! அங்கு முளைத்த துளசிச் செடியை அவள் நினைவாகப் பறித்து மார்பில் அணிந்து கொண்டாராம்! தான்மட்டுமன்றித் தன்னை வழிபடுவோரும் அதனை மதிக்க வேண்டுமென்று துளசிக்கு மகிமை கற்பித்தாராம்!

"ஓகோ! இந்தத் துளசியை நம்பித்தான் முன்பு தஞ்சாவூரில் அரசாண்ட நாயக்கர் வம்சத்தார் கோட்டைவிட்டார்களாம்!"

"ஆம். எவ்வளவு மூடநம்பிக்கை பார்த்தாயா! கத்தியும் செங்கோலும் தாங்கும் கரங்கள்கூடத் தன்னம்பிக்கையின்றித் துளசித் தழையை நம்பும் அளவுக்குப்பக்திமுற்றிவிட்டது! இதையெல்லாம் செய்தது யார் தெரியுமா?

"ஆகா! சந்தேகமில்லாமல் "அவர்கள்" தான்! இதை உண்டாக்கியதும் அவர்கள்; இதையே நம்பிக்கிடந்து சதா "ராமபஜனை" நடத்தி வந்த காந்தியாருக்கு குண்டுப் பரிசு தந்தவர்களும் அந்த "கோட்சேக்கள்" தான். யாருக்குத் தெரியாது?"

"தெரிந்தும் என்ன பயன்? இன்னும் உன்னினத்தார் சீர்திருந்தவில்லையே! என்னைப் பற்றிக் கேள்விப்பட்டுமிராத மேல்நாடுகளில் செல்வமும், நாகரீகமும் வாழ்க்கைத்தரமும் மலைபோல் உயர்ந்து கிடக்கும்போது சதா என்னைக் கும்பிட்டுக் கூத்தாடி எப்பொருளைக் கண்டாலும்—மாட்டுச் சாணத்தைக்கூட—லெட்சுமி, ஸ்ரீதேவி என்றுவணங்கி, இந்த நாட்டுக் கோழைகள் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொண்டு ஏழைகளாய் வாழ வழியின்றித் திகைக்கிறார்கள். செல்வமெல்லாம் எங்கோ சிலரிடத்தில், அல்லது சில இடங்களில் மிட்டா—மிராசாகவும், ஜமீனாகவும், மடமாகவும், வெள்ளி வாகனம், தங்கப் பல்லக்கு, வைரமுடியாகவும் முடங்கிக்கிடக்கிறது."

"ஆமாம். இதெல்லாம் யாவருக்கும் தெரிந்த உண்மைதானே!"

"தெரிந்தால் மட்டும் போதுமா? என்ன செய்வது என்பது புரிந்தால் தானே காரியம் நடக்கும்! இருக்கின்ற செல்வத்தை எப்படி எல்லோரும் அநுபவிப்பது என்பதற்குத் திட்டம் வேண்டாமா? அதையல்லவா முதலில் செய்யவேண்டும்!

"ஆனால் அதற்குத் தேவையான அதிகாரமும் ஆட்சிப்பொறுப்பும் அத்தகைய எண்ணம் படைத்தோரிடம் இருந்தால்தானே?"

'வரும்வரை காத்திருக்கவேண்டுமா? ஆட்சியிலிருப்போரைச் செய்யுமாறு தூண்ட வேண்டும். அல்லது அப்படிச் செய்வோரை ஆட்சிப்பீடத்திலமர்த்த வேண்டும். அதற்கான பக்குவநிலையை மக்களிடம் உண்டாக்கவும் வேண்டும். அதுதான் முதல்கடமை. அதை மறந்து விட்டு..."

"முதலில் எங்கள் பெண்கள் திருந்த வேண்டும். அவர்கள்தான் எதைக் கண்டாலும் லெட்சுமி என்கிறார்கள். விளக்குமாறுகூடச் சீதேவியாம் அவர்கட்கு! நீதானம்மா அவர்களுக்கு நல்ல புத்தி கற்பிக்கவேண்டும், தாயே லெட்சுமி லெட்சுமி!..."

* *

"ஓகோ! இது வேறு கேட்கிறதா? யாரவள் லெட்சுமி? கனவில்கூட அவள் நினைவா? சரி, சரி...நான் ஏன் இனி இந்த வீட்டிலிருக்கவேண்டும்...?" என்று என் மனைவி முகாரி தொடங்கினாள்.

"மாதே உனக்குக் கோபம் ஆகாதடி" என்று மங்களம் பாடி முடித்து, எழுந்து, பாயைச்சுருட்டினேன்.

["பெருச்சாளி"]

ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

னேன்? சிலருக்குக் கடவுள் இல்லை என்றும் இருக்க முடியாதென்றும் தோன்றுவானேன்? ஏதோ "அறிவிலிகளுக்கு" இப்படித் தோன்றுகிறது என்று கொள்ளுவதானாலும் "அறிவாளி"களுக்கு கடவுளைக்காப்பாற்ற வேண்டும், கடவுள் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றுவானேன்? கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று குழந்தைகளுக்கும் பள்ளிப் பிள்ளைகளுக்கும் கற்பிக்க முயற்சி செய்வானேன்?

அவைதான் போகட்டும் என்றாலும், கடவுள் அவதாரம் என்றும், கடவுள் தன்மை அடையப்பெற்ற பெரியார்கள் என்றும், கடவுள் மனித ரூபமாய்—பன்றி ரூபமாய்—மற்றும் ஏதேதோ ஆபாசரூபமாய் காணப்படுவானேன்? கடவுளுக்கு குமாரரும், தூதுவரும், அசரீரியும், மக்கள் மீது மருளும், அதாவது சாமியாடுதலும் ஏன?

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மெய்யாய் இருந்தாலும் பொய்யாய் இருந்தாலும், இவைகள் கடவுள் இருப்பதை ஊர்ஜிதம் செய்யவோ அல்லது மக்களுக்குக் கடவுளால் பயன் ஏற்படவோ அல்லது உலக நடப்புக்காவது மனித சமுதாய நல்வாழ்வுக்காவது ஏதாவது பயன் ஏற்படுமா என்பது மிகவும் சிந்திக்கவேண்டியதாகும்.

இதுவரையில் காலம் எப்படிக் கழிந்திருந்தாலும், இனி மேலாவது மனித சமுதாயம் பயமும் கவலையுமற்று, சாந்தியாய் திருப்தியாய் நல்வாழ்வு வாழவேண்டியது அவசியமாகும். அதற்கு ஏற்ற வண்ணம் இனிச்சமுதாய ஒழுங்குகள், ஒழுக்கங்கள் அமைக்கப்படவேண்டும். வருங்காலம் பயங்கரமான ஆபத்துக்குள்ளாகும் காலம்.

எப்படி எனில்,

மக்கள் இனிச் சுலபத்தில் சாகமாட்டார்கள். இதுவரை நம்மக்களுக்கு சராசரி ஆயுள் 25 என்றால், இனிமக்கள் சராசரி ஆயுள் 50-க்கு மேற்பட்டுத்தான் இருக்க முடியும். சுகாதாரம் அதிகம், வைத்திய வசதி அதிகம். மனிதன் நோய்களையும் துன்பங்களையும் கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அற்பாயுளாகப் போய்க் கொண்டிருந்தவன், தன்முயற்சியில் நம்பிக்கைவைத்துப் பரிகாரம்தேடி மீளுகிறான். மனிதனுக்கு பல துறைகளில் அறிவு உணர்ச்சி ஏற்பட்டு வாழ்வை நீட்டிக்கொள்ள வசதி பெற்றுவிட்டான்.

அதுபோலவே மக்கள் பிறப்பும் அதிகமாகிவிட்டது. கர்ப்பச் சிதைவு, சிசு மரணம், பிரசவ மரணம் இனி சுலபத்தில் ஏற்படாத மாதிரி பாதுகாப்புகள், பரிகாரங்கள் ஏற்பட்டுவிட்டன. இனி மலடும் இருப்பதற்கில்லாமல் நிவர்த்தி மார்க்கங்கள் ஏற்பட்டுவிட்டன. இனி விதவைகளாகவும் எவரும் காலங்கழிக்க முடியாமல் விதவை மணம், சுதந்தரக் காதல் முதலியன செல்வாக்குப் பெற்று, தாராளமாய் நடப்பில்வருவதன் மூலம் அவற்றாலும் பிறப்பு அதிகமாகின்றன.

பொதுவாக பிறப்பு விகிதமும், பலவிதச் சௌகரியங்களால் நபர் 1க்கு 2, 3, 4 என்பதாக குழந்தைகள் இருந்து வந்தது மாறி, இப்பொழுது நபர்ஒன்றுக்கு 6, 8, 10, 12 என்பதாகக் குழந்தைகள் பிறப்பதும், அவைகளும் நீண்ட நாள் வாழ்வதுமாக இருக்கின்றன.

இவர்களுக்கு எல்லாம் உணவு, போக போக்கியப்பொருள், பிழைப்பு, நல்வாழ்வு ஆகியவை தேவைப்படுவதுடன் உணவுப்பஞ்சம் ஏற்பட்டே தீரும். இவைகளில் பெரும் போட்டியும் அதன்பயனாய் வெறுப்பு, வஞ்சம், துரோகம் கொள்ளை கொலை முதலியவைகள் மலிந்துவிடும். சாதுவும் யோக்கியமுமான மக்கள்மிகமிகத் துன்பமடைய நேரிடும். அயோக்கியர்களும் காலிகளுமே நல்வாழ்வு வாழ்வார்கள். அதற்கேற்ற அரசாங்கம் தான் ஏற்படமுடியும்.

(●)

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம். 59. கச்சேரி வீதி, ஈரோடு.

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

தத்துவவிளக்கம்	0	12	0
இந்தியாவின் குறை பாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	0	5	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
திராவிடர்-ஆரியர் உண்மை	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புவோர், முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. 3-ரூபாய்க்கு உட்பட்ட ஆர்டராயிருந்தால், ஆர்டருக்குரிய முழுத் தொகையையும் செலவுத் தொகையையும் முதலிலேயே அனுப்பிவிடவேண்டும். 3-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டராயிருந்தால், நாலில் ஒரு பங்காவது முன்னால் அனுப்பிவிட வேண்டும். இப்படி முன்பணம் அனுப்பாத ஆர்டர்கள் நிச்சயமாகக் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், குடி அரசு, ஈரோடு.

ரோஜா முத்தையா